க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1924ளு டிசம்பர்மீ | இதழ் 4.

தெய்வ வழிபாடு.

"அரையனே யன்பர்க் கமுதனே யுடைய வப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப் பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே
திரைபொரா மன்னு மமுதத் தெண்கடலே திருப்பெருந் துறையுறை சிவனே
யுரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே."

பாண்டியநாடும், நாய்க்க அரசர்களும்.

—(o)—

விஜயநகர ராஜ்யத்தை. பெனு கொண்டா என்னும் பட்டணத்தைத் தலைநகராக்கிக்கொண்டு கிருஷ்ணராயர் அரசாண்டு வந்தார். இவரை சூரியகுலத்தரச வம்சத்தவராக எண்ணப்படுகின்றது. இவ்ராயரிடம் நாகமநாய்க்கர் என்பவர் சேனாதிபதியாகவும், ஆர்க்காடு முதல் நாஞ்சிநாடு வரைக்குமுள்ள தேசங்களில் வரும் தோப்பாப் பணங்களை வசூலிப்பவராகவும் இருந்தார். நாகமநாய்க்கர் தனக்குப் பிள்ளையில்லாமையால், காசிக்குச்சென்று பல உபவாசமிருந்து விஸ்வேஸரது அனுக்கிரகத்தால் பிள்ளையைப்பெற்று, அப்பிள்ளைக்கு விஸ்வநாதன் என்னும் பெயரை யிட்டழைத்தனர். இது நிற்க.

கிருஷ்ணராயர் அவர்கள் தமதூரில் பிரதி வருடமும் நவராத்திரி கொலுவுவைத்து, எட்டாம் நாளில் வேட்டைக்குச்சென்று,வேட்டையாடி ஒரு எருமைக்கடாவைப் பிடித்து வந்து, ஒன்பதாவது தினம் தமதூரிலுள்ள காளிக்கு பலியிடுவது வழக்கம். அவ் வழக்கப்பிரகாரம் அவ்வருடமும் ஓர் எருமைக்கடாவைப்பிடித்து வர, அவ்வெருமைக்குரிய கொம்புகளிரண்டும் வால்வரைக்கும் நீண்டிருத்தலால் அதை ஒரே வெட்டில் வெட்ட முடியாதெனத் தீர்மானித்தார்கள். ஆனால் நாகமநாய்க்கர் குமாரராகிய விஸ்வநாத நாய்க்கர் தாம் ஒரேவெட்டில் வெட்டி முடிப்பதாக முன்வந்து, வெட்டிமுடித்தார். அதைக்கண்ட கிருஷ்ணராயர் சந்தோஷித்து பல பரிசுகளளித்ததோடு, தமது ராஜ்யத்தில் விஸ்வநாத நாய்க்கரை ஓர் முக்கியஸ்தராகவும் அமர்த்திக்கொண்டார்.

விஜயநகரம் கிருஷ்ணராயர் காலத்தில் மதுரை ராஜ்யம், அதாவது பாண்டியராஜ்யம் க்ஷீண

தசையடைந்து பல வேற்றரசர்கள் ஹிம்சைக்குட்பட்டு, கடைசியாய் விஜயநகர ஸமஸ்தானத்துக்கு ஓர் சிற்றரசாகவும் ஆய்விட்டது. பாண்டியவரசர்கள் பலஹீனர்களாகவும், தங்கள் அரசைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வலியற்றவர்களாகவும் ஆய்விட்டார்கள். இந்நிலைமையில் பாண்டியவம்ஸத்தைச் சேர்ந்த சந்திரசேகர பாண்டியன் பட்டத்துக்கு வந்தான்.

சுமார் கி. பி. 1557-ம் ஆண்டில் சோழதேசத்தை யாண்ட வீரசேகர சோழன் மதுரைமீது படையெடுத்து வந்து, பாண்டியநாட்டை யாண்டிருந்த சந்திரசேகர பாண்டியனை ஜெயித்து, பாண்டிய நாட்டை சோழநாட்டோடு சேர்த்து அரசாண்டு வந்தான். இது விஷயத்தை சந்திரசேகர பாண்டியன் கிருஷ்ணராயரிடம் முறையிட, கிருஷ்ணராயர் தமது தளகர்த்தராகிய நாகமநாய்க்கரை தண்டு தளத்தோடு வீரசேகரசோழன் மீது சண்டைக்கு அனுப்பினர்.

நாகம நாய்க்கர் வீரசேகரசோழனை ஜெயித்து, பாண்டியநாட்டை, சந்திரசேகர பாண்டியனிடம் ஒப்புவிக்காது, தாமே பட்டங்கட்டிக் கொண்டு அரசாண்டார். இச் செய்தியை சந்திரசேகர பாண்டியன் கிருஷ்ணராயரிடந் தெரிவிக்க, கிருஷ்ணராயர் கோபங்கொண்டு தமது கொலுவிலுள்ள தளகர்த்தர்களைப் பார்த்து நாகம நாய்க்கன் தலையைக்கொண்டு வருபவர் ஒருவருமில்லையா? எனக் கேட்டனர். அதற்கு விஸ்வநாத நாய்க்கர் தாம் கொண்டுவருவதாக வாக்களித்து, அதன்பிரகாரம் மதுரைக்குச் சென்று, நாகம நாய்க்கரோடு சண்டைசெய்து ஜெயித்து, மதுரையை சந்திரசேகர பாண்டியனுக்குப் பட்டங்கட்டி, தகப்பனென்று பாராது விலங்கிட்டுக்கொண்டு வந்து கிருஷ்ணராயரின் முன்விட்டார். கிருஷ்ணராயர் சந்தோஷித்து, பல விருதுகளும் பரிசுகளும் கொடுத்து அவர் நிமித்தம் நாகம நாய்க்கரை மன்னித்தும் விட்டார். இஃது இவ்விதமிருக்க சந்திரசேகர பாண்டியன் பாண்டியநாட்டை சிலமாதமாண்டு காலமாயினன். அதற்குப் பிறகு அவன் மகனும் ஆண்டு சந்ததியில்லாமல் இறந்தனன்.

இதைக்கேட்ட கிருஷ்ணராயர் விஸ்வநாத நாய்க்கருக்கு "பாண்டிய சிம்மாசனாதிபதி" என்னும் பட்டமுங் கொடுத்து, பாண்டிய நாட்டை யாளுதற்கு சேனாதளவாடங்களோடு அனுப்பினார். அவர் பாண்டியநாட்டைக் கைக்கொண்டு அரியநாத முதலியாருக்கு தளகர்த்த பிரதானிக்கம் கொடுத்து, அரசாண்டனர். அப்படி யரசாண்ட விஸ்வநாத நாய்க்கரும் அவருக்குப் பின்னாண்ட அவர் வம்ஸத்து மற்ற நாய்க்க மன்னர்களும், நாய்க்க ஜாதியின் பல பிரிவுகளில பலிஜ நாய்க்கர்களின் வம்ஸத்தைச் சார்ந்தவர்கள்.

1. விஸ்வநாத நாய்க்கர்,
(1559-1563)

விஸ்வநாத நாய்க்கர் பாண்டிய நாட்டிற்கு அரசரானார். இவர் தனது சௌரியத்தாலும், ஆட்சித் திறமையாலும், பாண்டிய நாட்டின் கோட்டை கொத்தளங்களை சீர்படுத்திக்கொண்டு, கலகக்காரரை யெல்லாம் அடக்கி எங்கும் அமைதியை நிலைநாட்டினார். இவருக்கு உதவியாய் இவருடன் ஒத்துத் தர்ம சிந்தனையுடன் வேலைசெய்தவர் தளவாய் அரியநாத முதலி என்பவர். இவர் தாழ்ந்தநிலைமையிற் பிறந்து உயர்ந்த பதவிக்கு வந்தவர். இவர்கள் காலத்தில் ஸ்ரீரங்கத்திற்கும், இராமேஸ்வரத்திற்கும் யாத்திரை செய்பவர்களை வீச்ச நாட்டுக் கள்ளர்கள் கொள்ளையடிப்பது சகஜமாயிருந்தது. அவ்வூர் தஞ்சாவூர் அரசனோடு சேர்ந்திருந்தமையால், அப்பரி முதலை அவ்வரசன் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டு வந்தது. இவ்விவகாரம் எந்நேரமும் தொலையா திருந்தமையால், தஞ்சாவூர் அரசனுக்குத் தங்களுக்குரிய வல்லத்துக் கோட்டையைக் கொடுத்துவிட்டு, திருச்சினாப்பள்ளி கோட்டையை விஸ்வநாத நாய்க்கர் எடுத்துக் கொண்டு, அக்கோட்டையைப் பலப்படுத்தி, அவ்விதம் பின்னும் கொள்ளைநேராமல் ஆங்காங்கு தக்க பாதுகாவல் செய்து கள்ளர் பயத்தை நீக்கினார். பிறகு விஸ்வநாத நாய்க்கர் அரியநாத முதலியை திருநெல்வேலியையும் பந்தோபஸ்த்து செய்துவிட்டு வரும்படி யனுப்பினார்.

தெட்சணமாற நாட்டில் பஞ்சவழுதிகள் கோயில்பட்டி தாலுக்காவிலுள்ள கயத்தார் என்னும் நகரத்தில் ஸ்வாதீனமாய் ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டும், இன்னும் சில சிற்றரசர்கள் கொற்கையைச் சூழ்ந்துள்ள "குட்டம், படுக்கப்பத்து, பள்ளிப்பத்து, காயாமொழி, மூலப்பொழி, பரமன்குரிச்சி, தண்டுப்பத்து, சிவன்குடியேற்று, நட்டாத்தி" முதலிய வூர்களை யரசாண்டும் பாண்டியனுக்குக் கப்பங்கட்டிக்கொண்டும் வந்தார்கள். அவர்களில் பஞ்சவழுதிகள் வலுவுள்ளவர்கள். இவர்கள் விஸ்வநாத நாய்க்கரோடு முரண்டு, அரியநாத முதலியை எதிர்த்தார்கள். அரியநாத முதலி தன்னாலான வரைக்கும் முயற்சித்துப் பார்த்தும் அவ்வழுதிகளை எதிர்க்க முடியாமல் விஸ்வநாத நாய்க்கருக்குத் தெரிவித்தார். அவர் நேரில் சேனை தளத்துடன் வந்து எதிர்த்தும் சேனைகள் அழிந்ததேயன்றி ஜெயம்பெற முடியவில்லை. அதனால் நாய்க்கர் ஒரு சூழ்ச்சிசெய்து பஞ்சவழுதிகளுக்குக் கடிதமெழுதி யனுப்பினார். அதாவது நம்மால் ஏழைகள் இறக்க நேரிடுகிறது. அவ்விதமில்லாது நாம் ஒருவராக நிற்கின்றோம். நீங்கள் ஐவரும் ஏகோபித்து நின்று எம்மை எதிர்த்து சண்டை செய்யலாமெனவும்; நீங்கள் ஜெயித்தால் உங்கள் இராஜ்யத்தை நீங்களே ஆளலாமெனவும், நான் ஜெயித்தால் நீங்கள் உங்கள் ராஜ்யத்தை இழந்துவிட வேண்டுமென்று மெழுதினார். அதற்கு அவ்வழுதிகள் அந்த நிபந்தனைக்கு உட்பட்டு ஐவரில் ஒருவரே சண்டைசெய்ய முன்வருவதாகவுந் தெரிவித்தனர். அதன்பிரகாரம் நடந்த யுத்தத்தில் ஐவர் தலைவன் மரணமடைந்தான். ஒப்பந்தப்படி மற்ற நால்வரும் தங்கள் சீமையாகிய கோயில்பட்டி தாலுக்காவிலுள்ள கயத்தார் நகரத்தை விட்டு, ஸ்ரீவைகுண்டத் தாலுக்காவிலுள்ள ஏரலுக்கும் தாம்பிரபாணி யாற்றிற்கும் மத்தியிலுள்ள ஒரு சிறு கிராமத்தில் வசிக்க நேர்ந்தது. இவர்கள் வசித்தலால் அக்கிராமம் "திருவழுதி நாடான் விளை" என்னும் பெயரைப்பெற்றது. அக்கிராமத்தில் நாடார்களன்றி வேறுசாதியார் வசிப்பு இன்றுங் கிடையாது. இத் திருவழுதி நாடார் வம்சத்தில் இதற்கு நான்கு மைலில் தூரத்திலுள்ள நட்டாத்தி ஜமீன்தாரும் உட்படுவர். நட்டாத்திக்கும் திருவழுதி நாடான் விளைக்கும் மத்தியிலுள்ள பெருங்குளத்தில் இவர்களால் வணங்கப்பட்டுவந்த ஈஸ்வரர்கோயில் ஒன்றுண்டு. அந்த ஈஸ்வரர்கோயிலுக்கு திருவழுதி நாடார் குடும்பத்தவரால் அநேக மானியங்கள் விடப்பட்டும், அநேக கைங்கிரியங்கள் பண்டைப்பகால முதல் செய்யப்பட்டும் வருகின்றமையின் அக்கோவில் "திருவழுதி யீஸ்வரர் கோயில்" என்னும் பெயரைப் பெற்றது. நாளதும் அக்கோயிலில் பங்குனி மாதம் நடக்கும் உற்சவ சந்தர்ப்பத்தில் ஷை திருவழுதி நாடார் குடும்பத் தலைவருக்கு, ஷை கோவில் ஸ்தானிகர் பரிவட்டம் கட்டி அநேக மரியாதைகளும் செய்து வருகின்றனர். அது தவிர ஷை குடும்பத்தவரால் ஒரு மண்டபப்படியுஞ் செய்துவருகிறது. கார்த்திகை மாதத் தீபத் தினத்தில் சொக்கப்பனையும், அது சம்மந்தமான செலவுகளும் ஷை திருவழுதி நாடார் குடும்பத்தவராலேயே பரம்பரையாய்ச் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே அப்பஞ்ச வழுதி நாடார் வம்சத்தவர்கள் தற்காலம் இவ்வித நிலைமையை யடைந்திருக்கின்றனர். பாண்டியன் ஆளுங் காலத்திலுள்ள பல சிற்றரசருள் இப்பஞ்சவழுதிகளும் உட்படுவர். இவர்கள் விஸ்வநாத நாய்க்கனால் இவ்வித நிலைமையை யடைந்தபின், மற்ற சிற்றரசர்கள் அந்நாய்க்கருக்கு உட்பட்டு நடக்கநேர்ந்தது. அவர்களில் சிலரை இங்கறிவிப்பாம். (இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

☞ * க்ஷத்திரியன். *

தபால் சார்ஜ் உள்பட இரண்டரை அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

கொஞ்சம் காப்பிகளே கையிருப்பு.

சிக்கனச்செலவு.

(A. K. அண்ணாமலை நாடார், அருப்புக்கோட்டை.)

சிக்கனச்செலவே சிலாக்கியம். சிக்கனச்செலவால் சிறுமைபோம்; பெருமையாம். வரவுக்கு தகுந்தபடி தன்னால் கூடியவரை சிக்கனமாயிருக்கவேண்டும். வரவுக்கு மிஞ்சிய செலவால் தொல்லைவரும். கடன்வரும் துன்பந்தரும். சிக்கனச்செலவைக்கைக்கொள்ள வேண்டுமென்று கஞ்சத்தனத்தை கைக்கொள்ளக் கூடாது. கஞ்சம் கனவிலும் வேண்டாம். கஞ்சம் உள்ளவர்க்கே பஞ்சம் தோன்றும். கஞ்சத்தால் மிஞ்சும் பணம் நில்லாது; ஆற்றில்கரைத்த புளியாகும். கஞ்சத்தைக் கைக்கொள்ளேல்.

சிக்கனச்செலவை சிநேகி. சிக்கனச்செலவின்றேல் பின் சிரமமேற்படும். சிக்கனச் செலவால் செல்வம் மீதிபடுகின்றது. இதை சேமித்து வைப்பதினால் பிற்காலத்தில் நாம் நோயாளியாயிருக்கும்போதாவது, கிழப் பருவத்திலாவது அல்லது அவசியச்செலவு யேற்பட்ட காலத்திலாவது இப்பணம் நம்மைக் கைதூக்கிவிட்டுத் துன்மையைப்போக்கி நன்மையைப் பயக்கும். வந்த பணத்தையெல்லாம் வீணாய்ச்சிலவுசெய்துவிட்டால், பின்னால் பெரும் துன்பத்திற்கும் [illegible] நஷ்டங்களுக்கும் பாத்திரமாகவேண்டும். [illegible]ருக்கச் செலவால் பெருகும் பணம். கஞ்சத்தனம் செய்தா[illegible] கண்டோரெல்லாம் கேலி செய்வர். கஞ்சஞ் கஷ்டத்திற்காளாக்கும். கஞ்சத்தால் மிஞ்சும் பணம் காற்றாய்ப் பறந்துவிடும். கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை யென்பதுபோல பணமிருந்தும் அனுபவித்து சுகிக்கா[illegible] வை[illegible]வா[illegible] கஞ்ச மனிதர்கள். இப்படிச் சேமித்துவைக்கும் பணத்தை ஆற்றில் கலக்கிய சர்க்கரைபோல் அவர்கள் பிள்ளைகளே கோர்ட்டுக்கும், குடிக்கும், விபசாரத்திற்கும் சிலவுசெய்து விடுவார்கள். அல்லது திருடன் கைபோனாலும் போகும். இன்னொருவர் அனுபவித்தாலு மநுபவிப்பர்.

இதனால் வீண்செலவும் வேண்டாம்; கஞ்சத்தனமும் வேண்டாம். சிக்கனச்செலவே சிறந்தது. வரும்படிக்கு தகுந்த செலவே வலிமையுடையது. வீண்செலவால் பெருமை கிடைக்குமென்பது பேதமை. வீண்செலவாளர் ஆண்களில் மூடர். டம்பாச்சாரிவேஷம் பூணவேண்டாம். அதிகச்செலவால் அவமானம் நேரும். வீண்செலவிலிருக்கும் விருப்பைவிட்டு, வெறுப்பைத் தொட்டுக்கொள்ள வேண்டும். வீண்செலவே கடனுக்குக் காரணமாகும். வீண்செலவுக்காரன் வீணன். அதிகச்செலவு மதிகெட்டவர்க்குண்டு. ஆடம்பரத்தாலேயே வீண்செலவு விளைகிறது. ஆடம்பரத்திற்கு ஆசையே வித்து. விளைக்கும் ஆசையே விதை. வீண்செலவை விடு. வீண்சிலவைக்கொண்டு பணத்தை வீணாய் விதைக்கவேண்டாம். சம்பாதிப்பதுதான் கஷ்டம். செலவுசெய்வது எவ்வளவு வேண்டுமானாலும் ஒரு விநாடி. ஆயிரம் ரூபாய் செலவு செய்வது வெகு சுலபம். ஆனால் ‘[illegible]சா சம்பாதிப்பதோ வெகு கடினம்.

"ஆனமுதலி லதிகஞ் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங்கள்ளனாயேழ்பிறப்புந்தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்றார் ஆன்றோர். இதனால் வரவுக்கு மிஞ்சிய செலவால் வரும் பலன்களை நன்கறியலாம். "பொருடனைப் போற்றிவாழ்' என்பதினாலும், "அருளிலார்க் கவ்வுலகமில்லை, பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" என்னும் திருவள்ளுவரின் திருமொழியினாலும், கைப்பொருளொன்றுண்டாயி னெல்லாருஞ் சென்றவ் றெதிர்கொள்வ" ரென்பதினாலும் பொருளின் பெருமை விளங்கும்.

வீண்செலவு செய்து பணமில்லானை இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்ததாய் வேண்டாள்? என்பதினாலும்,

"பொருளில்லார்க் கின்பமில்லை
புண்ணியமில்லை
மருவிய கீர்த்தியில்லை
மைந்தரின் பெருமையில்லை

கருதிய கருமமில்லைக்
கதிபெறு வழியுமில்லை
பெருநிலத் தனிச்சஞ்சாரப்
பிரேதமாய்த் திரிகுவாரே"

என்பதினாலுமறியலாம் இப்பொருளின் அருமைபெருமையை. பணமில்லாதவர் பிணம். அதிகச்செலவு ஆகாது. வீண்செலவால் வினை முளைக்கும். சிக்கனச்செலவே ஜெயங்கொடுக்கும். சிக்கனச்செலவே சிறந்தது. 'அஃகுங் காசும் சிக்கெனத்தேடு' என்னும் நீதியுமிங்கு கவனிக்கற்பாலது. புதையலை பூதம் காப்பது போல் பணத்தை புதைத்துவைத்து காத்துக் கொண்டிருக்கச் சொல்லவில்லை. சிக்கனச் செலவு சாலவிதத்திற்கும் நன்மையேயொழிய, துன்மையில்லை. சிக்கனச்செலவே சுகம். சிக்கனச்செலவைவிட்டு, வீண்செலவை தொட்டுக் கொண்டால்—வரவுக்கு மிஞ்சிய செலவுசெய்தால் கடன் சேர்ந்துவிடும். தரித்திரம் வந்து தலைவிரித்தாடும். எண்ணற்ற கஷ்டங்கள் தோன்றும். இதனாலன்றோ 'கடனுண்டு வாழாமை காண்—இனிதே' என்று இனியவை நாற்பது இயம்புகிறது.

வரும்படிக்கதிகமாய் வீண்செலவு செய்தால் வறுமைவரும். சிக்கனச்செலவு மக்களைக்காக்கும். சிக்கனச்செலவு பக்கத்துணை. எக்காலத்திலும் சிக்கனச்செலவே மிக்கநல்லது. செட்டாயிருந்தால் செல்வவானாகலாம். சிக்கனச்செலவு சீமானாக்கும். கற்புக்கரசிகளாகிய காரிகைகளனைவரும் சிக்கனச்செலவை கைக்கொள்ள வேண்டும். செலவுக்காக ஒரு ரூபாய் கொடுத்தால் முக்கால்ரூபாயை செலவு செய்துவிட்டு கால்ரூபாயை க்ஷேமித்து வைக்கவேண்டுமேயொழிய, ஒன்றரைரூபாயை செலவுசெய்துவிட்டு அரைரூபாய் கடன் வைக்கக்கூடாது. ஸ்திரிகளனைவரும் சிக்கனச்செலவை அவசியம் சிநேகிக்கவேண்டும்.

சிலர் வரும்படி அதிகமாக வரும்போது சேமித்துவைக்காது அனைத்தினையும் தமாஷாக செலவுசெய்து விடுகிறார்கள். பின் வரும்படி குறைவாய் வரும்போது அதற்கு தகுதியாக சுருக்கிச் செலவுசெய்யத் தெரியாது முன்போல் செலவுசெய்து கடன்படுகிறார்கள். பின் நகையாதிகளை வகைவகையாய் அடகு வைத்தும் கடன்தொகை அடைபடாதுவட்டி வளர்ந்து ஆடுமாடுகளையும், வீடுகாடுகளையும் விற்றுக் கடனை அடைப்போருண்டு; பின்னும் கடனடைபடாது கஷ்டப்படுவோருமுண்டு.

இப்படிப்பட்டவர்கள் நோய் வாய்ப்பட்டக் காலத்திலும் கிழப்பருவத்திலும், விசேடச் செலவு நேரங்களிலுமென்ன செய்வார்களோ தெரியவில்லை. செட்டாயிருந்தாலே துட்டுச் சேரும். தாய்தந்தையர் தங்கள் புத்திர புத்திரிகளை இவ்விஷயத்தில் கவனிக்கவேண்டும். இருகுரவர்களும் தங்கள் மக்கள்மேலுள்ள பிரியத்தாலதிக பொருள்களை கொடுத்தாலவர்கள் முதலில் பீடி சிகரெட் குடித்து, பின் மதுபானமருந்தி, துஷ்டரோடு இஷ்டம்வைத்து விபசாரம் செய்து கஷ்டமும் நஷ்டமுமடைவார்கள். ஆதலின் இவர்களுக்கு அதிக பணங்களை கொடாது, சிக்கனமாய் செலவுசெய்ய அதற்கு தக்கபடி பணங் கொடுக்கவேண்டும். அதிக கொஞ்சமாவது அல்லது கொடாமலாவதிருந்து விட்டால் களவில் கைவைத்து விடுவார்கள்; அல்லது கடனேற்றிவைத்து விடுவார்கள். இனிமேலாவது ஒவ்வொருவரும் சிறப்பைக் கொடுக்கும் சிக்கனச்செலவை உபயோகிக்கச் சிவானந்தனைச் சிந்தையில் சிந்திப்பாம். சுபம்!

———(s)———

புண்ட்ரதாரணம்.

(முன்தொடர்ச்சி.)

ஐய, திருநீற்றின் ஐந்து நாமங்களின் உண்மைப்பெயர்களை விளக்குவோமெனக் கூறினேமல்லவா? இவ்விஷயத்தில் ஜாபாலோபநிடதம் "விபூதி, பஸ்மம், பஸிதம், க்ஷாரம், ரக்ஷை" என ஐந்து நாமங்களுண்டெனக் கூறுகிறது. அவ்வுபநிடதம் இப்பெயர்களை மாத்திரம் கூறியொழியாது அதன் காரணத்தையும் அச்சொற்பொருளையும் நன்கெடுத்து விளக்கியது

இதன் சுருக்கம் வருமாறு:—

உலகத்தில் ஆனினம் ஐவகையாம். அவற்றுள் கபிலை, கிருஷ்ணை, இரத்தை, சுவேதை, சித்திரை எனப் பெயர்களுண்டு. அதன் மலத்தால் உண்டாகும் திருநீற்றிலும் ஆற்றல் வேற்றுமை பெறும். இவ்வாக்களுக்கு இப்பெயர் நிறத்தாலமைந்ததாயினும் அந்நிறவேற்றுமை குணங்கள் வேறுபடுவதற்கும் காரணமென ஆன்றோர் கருத்து. ஆதலாற்றான் தன்வந்திரி பகவான் தாமெழுதிய பதார்த்த குணத்தில் "வெண்ணிறம் பெற்ற ஆக்களின் பால் வாதத்தை யொழிக்கும், கரியநிறம் பெற்ற ஆக்களின் பால் பித்தத்தை யொழிக்கும். செந்நிறமுடைய ஆக்களின்பால் கபத்தை யொழிக்கும், கபிலையின்பால் முக்குற்றங்களையும் அகற்று,, மெனக் கூறியிருக்கின்றார். எச்சரீரத்திலும் இந்நிற வேற்றுமை தாய் தந்தைகள் உட்கொள்ளும் ஆகார வேற்றுமையைப் பொறுத்ததென பெண்களின் பால்களும் இக்குண வேற்றுமைகள் உள்ளன என பாற்குணப் படலத்தில் கூறியிருக்கின்றார்.

அவற்றுள் மண்ணும் தீயும் கலந்தது பித்தமெனவும், ஆகாயமும் வாயுவுங்கலந்தது வாதமெனவும், தனித்த நீர் கபமெனவும், பித்தம் பொன்னிறம் பெற்றதும், உற்பத்திக்குச் சாதகமாதலின் அது ரஜோகுணமெனவும் பிரமதேவனே அதற்கு நாதனெனவும் வாதம் கரியநிறமுள்ளதெனவும், அது சரீரம் நிலைபெறுதற்குக் காரணமாதலின், விஷ்ணு அதற்கு நாதனெனவும், கபம் வெண்ணிறம் பெற்று மனிதன் முடிவுக்குக் காரணமாதலின், அதற்கு நாதன் ருத்திரனெனவும் வைத்திய நூலின் றுணிபு. விரிவுமற்றோரிடம். அங்கு சுருதியும் ஐவிதமான ஆக்களைப்பிரித்து அவைகளின் சரீரத்திலியற்கையிலமைந்தபஞ்சபூதசக்திகளின்வேற்றுமைகளையுநன்கு துணிந்து நம்மவர்க்குபதேசிக்கின்றது. திருநீற்றின் வேற்றுமையும் அவ்வாக்களின் வேற்றுமைகளைப் பற்றியே என்பது துணிபு.

அவற்றுள் கபிலையிடம் பிருதிவினம்சம் அதிகமாதலின் அதன் வழிதோன்றிய திருநீற்றிற்கு "பூதி" என்று பெயர். இவ்வுலகத்தில் வசிக்கு மானிடர்க்கு இப்பூதியே அதிகவுபயோகம். 'ஐஸ்வரியத்திற்குக் காரணமாதல் பற்றி இது பூதி எனப்படும்' என்று சுருதியே அப்பூதிச் சொற்குப் பொருளுரைக்கின்றது. திருநீற்றைத் தரித்தலாலுண்டாகும் ஐசுவரியம் என்னும் திருநீற்றுப்பயனை நிறைவேற்றுங் குன்றாவலியுடைத்தது. இங்கு ஐசுவரியமென்பது உலகத்தார் வழங்குஞ் செல்வமல்ல. அஃது அழிவில்லா ஆனந்தத்தை விரும்பும் ஆன்றோர் கருதும் பயனென்க. அங்ஙனமாயின், இங்கு யாது ஐசுவரியமென்னில், ஈசுவரனது தன்மையே ஐசுவரியமென்றறிக. இத்திருநீற்றை விதிப்படி தரித்து அதனுண்மையையறிதலால் ஜீவன் மலத்தையொழித்துச் சிவனாவான்" என்பது இங்குண்மை. அது கொண்டே தைத்திரீய வுபநிடதம் "பூதியை விட்டொழியற்க" என்று ஆணையிடுகின்றது. இவ்வாக்கியத்திற்கு ஆசிரியர் சங்கரமுனிவரும் அங்ஙனமே பொருளுரைத்தனர். "ஐசுவரியத்திற்குக் காரணமாம் பொருளை விட்டொழித்தல் கூடாது" என்பது அவர் கூற்று. அந்தணர்க்கு அனுதினமும் திருபுண்டர தாரண விதியை எடுத்துரைப்பாம். பூதியை விட்டொழியற்க என்றல்லவோ ஆரணங்கூறுகின்றது." என்று ஆன்றோர் மணிபாய ஆசிரியர் போதாயனமாமுனிவர் அருளிய திருவாக்கென்றறிக.

நிகண்டுகளில் "பூதி, விபூதி, ஐசுவரியம் உலகவழக்கில் செல்வத்தைக் குறிக்குமெனவும், நீற்றையுங் குறிக்குமெனவும் அமலன் முதலிய மூதறிஞர் குறித்தார். அவின் விசேடமான பூதி விபூதியாகும். [சேடம்-பெருமை தாங்கியது. பூதி-நீறு, அதையே திருநீறெனத் தென்மொழியில் வழங்குவது] எவ்விதச் செல்வமும் நிலத்தால் விளைவது இயல்பாதலின் அதற்கிடமான கபிலையிடம் பூதி தோன்றுமென உபசரித்துக் கூறினர். 'பயமெனப்படும்" என்றதற்கு வேதம் பொருளுரைத்தது. முன் கன்மத்தைப்பற்றி எழுதியவிடம், நீடித்த காலஞ் செல்லின், சரீரத்தில் பாவங்கள் ஓர் வகை மலங்களாக நிற்குமென எடுத்துரைத்

தோமல்லவா? இங்கு யாம் முற்கூறியவழி அம்மலமாய் நின்ற பாபங்களை யொழிக்குந் தன்மை திருநீற்றிற்கு இயல்பிலமைந்ததாயின் அது பஸ்மமென்றாயிற்று. உலகத்தில் நீரைக் கொண்டு எல்லாப் பொருளையும் கழுவுதல் வழக்கத்திலுள்ளதாயினும், பாபமென்னும் மலங்களை யொழிக்குந் தன்மைபெற்ற பஸ்மம் அக்நீஷோம்சம் பொருந்திய ஆவினிடம் தோன்றியதென வுபசரிக்கப் பெற்றது. இவ்விஷயங்களை இனிது விளக்க வெழுந்த ஜாபால சுருதி அடுத்த பிராமணத்தில் அக்கினிஷ்டோம தத்துவத்தைச் சொல்லுமிடம் நீரிலுள்ளவிரண்டம்சமும் நெருப்பிலுமென்றே கூறுகிறது. எங்ஙனமெனில், தேயுவினிடம் பிரகாசம் கொளுத்தலென இருவகைப் பொருளமைந்ததெனவும், நீரில் வெண்மை, பிரகாசமென இருபொருளமைந்ததும் இரண்டிலும் கலவாது நிற்பதும் பிரகாச மென்னுமோர் அம்சம்'' என்பது. இனி அநலனென்றும் சோமனென்றும் வழங்கப்பட்ட நீரும் நெருப்பும் பல பொருள்களையும் சுத்தி செய்யுமென்பது அதினியலே யறிந்தோர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனியே. இனி மூன்றாவது பெயர் "பஸிதம்" என்பது "மற்றதை அல்லது மறைந்ததை வெளியிடுதலால் பஸிதமெனப்படும்" என்னும் பொருள் வேதத்திலுளது. யாமுற்கூறியவாறு மூன்றாகப் பகுக்கப்பட்ட எல்லாப் பொருள்களையும் உணர்த்தி அவ்வழி எங்கும் நிறைந்த பரம்பொருளென்னும் பேரொளிப் பிரகாசத்தை மனத்திலுதிக்கச் செய்தலால் இதற்கு அப்பெயர் தகுமென்க. மறைந்த பொருளை விளக்குவது தேயுவின் தொழிலாதலால் பற்றி இதை தேயு நிறைந்த ஆவின்கண் உபசரிக்கலாயிற்று இனி 'க்ஷார'மென்பது நான்காவது பெயர் "ஆபத்துக்களை யொழித்தலால் அஃது க்ஷாரமெனப்படும்" என்பது உபநிடத வியாக்கியானம். இங்கு ஆபத்தென்பது அநாதியாகிய அவித்தையையே. ஓரிடத்திலுள்ள பொருளை மற்றோரிடஞ் சேர்ப்பது வாயுவின் தொழிலாதல் பற்றி அவ்வாயு வம்சம் நிறைந்த ஆவினிடம் பிறந்ததாக வுபசரிக்கப்பட்டது. இக்காலத்துச் சோதர்களும் க்ஷாரமென்பது ஒருவகைக் காற்றென வழங்குகிறார்கள். உவர்ப்பு எல்லாச் சுவைகளிலும் மேலானதாதலாலும், எல்லாச் சுவைகளையும் அமிழ்த்துந் தன்மையாதலாலும், எல்லாச் சுவைகளிலும் கலக்கும் தன்மையாதலாலும் தமது ஏற்றத்தாழ்வுகளால் பொருள்களைக் கொடுக்கும் சுபாவம் பெற்றதாதலாலும், எப்பொருளிலுமமைந்ததாதலாலும், நிமித்தமாதலாலும், மாறா நிலைமைபெற்றதாதலாலும், கல் முதலிய கடினப் பொருள்களையும் தம்முட்புகுந்து காலத்தாலொழிக்குந் தன்மை பெற்றதாதலாலும் எல்லாவுயிர்களுக்கு மின்றியமையாததாதலாலும் அக்குணங்கள் நிறைந்த இத்திருநீற்றின் கண் அவ்வுவர்ப்பைக் குறிக்கும் க்ஷாரம் என்னும் பெயரை இத்திருநீற்றிற்குச் சூட்டினரென்றறிக. இனி அதற்கு ஐந்தாம் பெயர் ரக்ஷை என்பது.

"பூதம், பிரேதம், பிசாசம், பிரமராக்ஷஸம், அபஸ்மாரம், இவற்றின் பயத்தை விளக்குதலால் ரக்ஷை எனப்படுமென ஜாபாலோபநிடதத்தில் இச் சொற்பொருள் கூறப்பட்டது. யாம் காணக்கூடாத மனத்தோற்றமாய் நிற்கும் மேற்கூறிய பயத்தை நிவர்த்தி செய்தலும் பரோக்ஷ பலமாதலின், இஃது ஆகாயாம்சம் நிறைந்த ஆவின் வழிதோன்றியதென உபசரிக்கப்பட்டது. இவ்வைந்து பெயர்களில் பஸிதம் பஸ்மம் என்னுமிரண்டு பெயர்கள் தவிர விபூதி, க்ஷாரம், ரக்ஷை என்னு மூன்று சொற்களும் முறையே செல்வம் உவர்ப்பு ஆக்ஷியாகிய மற்றையப் பொருள்களையும் உணர்த்துவதாக வுலகவழக்கு. ஆயினும், இங்கு வேதம் ஒருவாறு திருநீற்றை இச்சொற்களிட்டழைத்தால் இவை அதன் பெயராயமையா தொழியா. ஆயின், எக்காலம் நீராடினும் எச்சன்மத்தைத் தொடங்கினும் அக்காலம் இத்திருநீறணிதல் இன்றியமையாதென அறநூலாய்ந்தோர் கூறுவர். இனி நீராட்டம் செய்தவுடன் திருநீறு தரித்தலின் பயனும் இதை ஆக்ஷேபஸ்தானம் பண்ணுவதற்குக் காரணமும் பின்வரும். (பிர்மவித்யா)

நாடகம்.

(அ. கு. ஆதித்தன், காயாமொழி.)

இராமதீர்த்தஸ்வாமிகள் பின்வரும் சிறு கதையைத் தனது பிரசங்கத்தினூடே கூறினார். ஒரு குழந்தை ஓர் நாள் வெயிலில் தவழ்ந்து விளையாடும் சமயத்து, தனது நிழலிலுள்ள சுருண்ட மயிர் தொங்குதல் பார்வைக்கு நன்று யிருக்கக்கண்டு அதைப் பிடிக்கப் பிரயாசை எடுத்தது. குழந்தையின் கையில் உரோமநிழல அகப்படவில்லை. காலை நேரமானதால் நிழல் கொஞ்சம் தூரத்திலிருந்தது. குழந்தை எட்டிப் பிடிக்கப் போகுஞ் சமயம் நிழலும் எட்டிப்போய்விடவே, குழந்தை ஏமாந்து நிற்கும். பின் பிரயத்தனஞ் செய்யும், பலனில்லாது அழும், மறுபடியும் பிடிக்கப் போகும் இவ்வாறு சங்கடப்பட்டுக் கொண்டது. இவற்றை யெல்லாங் கவனித்த தாய் குழந்தையின் கருத்தையறிந்து, அதன் கரத்தைப் பிடித்து சிரசிலுள்ள மயிரைப் பிடிக்கச் செய்ய குழந்தையும் அவ்வாறு செய்து, நிழலைப் பார்த்துத் திருப்தியுற்றது. குழந்தை தன்னிடம் குடிகொண்டுள்ள இச்சக்தியை அறியாதிருந்தது. இதுபோலவே உலகத்திலுள்ள மானிட ஜென்மமெடுத்த நாம் நமது அகத்தே கடவுளிருப்பதை யுன்னாது (குழந்தை நிழலிடம் ஓடியதுபோல) காசி, கன்னியாகுமரி எனக் கால் கடுக்க நடந்து தவிக்கின்றோம். உண்மையிற் கடவுள் அங்கல்ல நமது இதயத்தே இருக்கிறார். நாம் ஏதேனும் ஒரு தகாதகாரியஞ் செய்வோமாயின் நம்மை ஏதோ ஒன்று சிறிது வாட்டமுறச் செய்கிறது. ஓர் நற்காரியம் செய்யப் புகின் ஊக்கத்தையும் முக மலர்ச்சியையு முண்டாக்குகிறது. இதுவே நம்முளடங்கிய ஆன்மசக்தி. இதை மனச் சாட்சி என்றும் உள்ளொளி என்று மழைப்பர். இதுவே நமது அகத்திற் குடிகொண்ட கடவுள். இதை நாம் நாடிப் பிரத்தியட்சமாய்க்காண வேண்டும். இந்த அகத்தை நாடுதலே நாடகமெனக் கூறப்படும்.

(நாடு+அகம்) பண்டைக்காலத்தில், இக் காலத்தே கதைகள் நடித்துக் காட்டப்படுவன போல காட்டப்பட்டன. நல்ல நடிகள், தீபாவளி, சதுர்த்தசி, நவராத்திரி முதலிய தினங்களில் பாரதம் இராமாயண முதலிய இதிகாசங்களின் கிளைக் கதைகளையும் திருவிளையாடல் பெரிய புராண முதலியவற்றின் சரிதங்களையும் நடத்தி பக்தியி லீடுபடுத்தினர். நடினத்தைக் கண்ணுறும் ஜனங்களின் மனம் சதா ஈசனையே தியானிக்குமே யொழிய, வேறு சிந்தனைகள் அங்கு உண்டாகா. அந்த நடிகளும் ஊர் ஊராகச் சென்று நடித்து, ஆங்காங்குள்ளவர்களை பக்தியிற் பரவசப் படுத்துவார்கள். இவ்வாறு தங்களின் அகத்துள்ள கடவுளையே இந்த நடினம் நாடச் செய்ததா லிதற்கு நாடகமெனப் பெயர் வந்தது.

தற்காலத்திலோ ஊர்கள்தோறும் நாடகசாலைகள் கட்டப்பட்டிருக்கின்றன. நாற்காலியும் பலகைகளுமாகப் பரப்பி பணம்பிரிக்க வழிகளேற்பாடு அதிக ஒழுங்கு. நடிக்கப்படுங் கதைகளிலோ கதாநாயகனுக்கும் நாயகிக்குஞ் சரசவார்த்தைகளோடு கூடிய தர்க்கங்களின்றி பார்ப்பது அரிது. அஃதுடன் மகளிரின் ஆட்டத்தையும் சிரிப்பையும் கவர்வதற்காகச் சகல வசதிகளும் செய்யப்படுகின்றன. கதை பார்க்கப் போகுமொருவன் சிறிதேனும் கடவுளைச் சிந்திப்பானென எண்ண இடங்கிடையாது. அகத்தின் உணர்ச்சி அவனுக்கு உண்டாவதுமில்லை. அவன் அதைத் தேடுவதுமில்லை. அவனுடைய கண், காது யாவும் புறத்தே யிருக்கின்றன. அவன் நாடுவதும் புறமே. ஆனபடியின் இக்காலத்து நடினத்தை நாடகமெனக் கூறலாகாதென்பதும் நாட்டுப்புறமென்றே கூறவேண்டுமென்பது எமது துணிபு.

(நாடு+புறம்=நாட்டுப்புறம்) மேலும் நடினம் காணச் செல்லுமொருவன் வழியிலேனும் தெய்வ சிந்தனை செய்வானோ? இல்லை. அவன் புறத்தே தெருவிலுள்ள ஸோடா, வெற்றிலை பாக்குக் கடைகள், விலைமாதர் வீடுகள் உற்று நோக்கியே செல்கின்றான். இக்காரணம் பற்றி

யாமிட்ட பேரிதற்குப் பன்முறையும் பொருந்தும். இக்காலத்தே தேவ ஆலயங்களில் நடக்கும் சதுர் என்னும் தேவடியாராட்டமும், பக்தர்களை மாயவலை யுட்படுத்தும் பெருஞ்சோதனையாக விருக்கிறது. முற்காலத்தே சங்கீதம் நடனம் முதலியவற்றுட் சிறந்த மாதர்களைச்சங்கீதம், நடனம் செய்வித்து அவர்களின் திறனை மெச்சிப் பரிசளிக்கும் வழக்கமிருந்தது அவர்களின் சங்கீதமும் தொண்டர்களைப் பக்தியிலீடுபடுத்திற்று. இக்காலத்திலோ அதன் பூர்வ கோட்பாடுகளை மாற்றித் துன்மார்க்கங்களில் பிரவேசிக்கின்றது. யாவுங் காலவேற்றுமையே. நாடகமும் பரதநாட்டியமும் இக்கதியடைகின்றன.

பத்திரிக்கைகளை வாசித்து வரும் ஒருவன் நாட்டுச் சமாச்சாரங்களையெல்லாம் எவ்வண்ணம் அறிந்துகொள்ளுகின்றனோ, அவ்வண்ணமே கதைகள் நடிப்பதைக் கண்ணுறும் ஒருவனும் நாட்டுவழக்கங்களை அறிந்து கொள்கிறான். எப்படியெனின் அரிச்சந்திரன் கதை நடிக்கப்படுமாயின், அக்காலத்து அரசரின் செங்கோன்மையுங் கோவிலன் கதையில் அக்காலத்து மாதர் கற்பும் ஒவ்வொருவர் அகத்திலும் குடிகொள்வது போலவே இவ்விதமாக நாட்டுவழக்கத்தை யகத்துள் காட்டுவதாலும் நாடகமெனக் கூறுவர்.

சாதாரண வழக்கத்தில், கள்ளன் ஒருவன் உண்மையாளன் போல் பேசுவானாயின், ஜனங்கள் "அவன் செய்வதெல்லாம் நாடகமெனக்" கூறுகிறார்கள். இங்கு நாடகமெனின் "வெளிவேடம்" எனப் பொருள் படும். இனி இவ்வுலக நாடகத்தைப்பற்றிச் சிறிது வரைவாம். முற்காலங்களில் ஆச்ரமங்களெனச் சிறு குடிசைகளில் ஆசானு மாணவருமாக இருந்து கல்விகற்று வருவர். மாணவன் ஆசானிடம் கைகட்டி வாய்பொத்திப் பக்தி விஸ்வாஸத்துடனிருப்பான். ஆசான் சுத்தமனதுடையவராயும் பையன்களின் முன்னேற்றத்தைக் கருதுபவராகவும், அவர்களுக்காக உழைப்பவராகவுமிருப்பார். இக்காலத்துப் பாடசாலைகளோ அரண்மாதிரித் தோன்றும். ஆசான் ஓர் பக்கம் டாம்பீகமே ஓர் உருவெனக் கால்மேற் காலாக உட்கார்ந்திருக்க, மாணவர் டம்பாச்சாரி குழந்தைகள் போல் கண்ணாடியும் சுருட்டும் தீப்பெட்டியுங் கொண்டிருப்பார். ஆசான் ஏதேனும் கோபித்திடின், தாங்கள் பிழைத் தவறாது பெற்றுங் கொள்ளுங்கள். வீண் பேச்சு வேண்டாமென மானமின்றிக் கூறிவிடுவர். குருவோ பையன் வித்தையிற் குறைவுபடின், தனியாகப் பீஸ்வாங்கிப் படித்துக் கொடுக்கிறாரே யொழிய, பையனின் முன்னேற்ற அபிமானங் கொண்டு செய்தல் கிடையாது. யாவும் பணமென்றே பறந்தோடித் திரியும். இம்மட்டோ? மாணவர்களைச் சுருட்டு, பொடி வாங்கிக்கொடு என்று கேட்பாரும் பலர். பரீக்ஷைகாலங்களில் லஞ்சம் பெற்றுச் சிடர்களைத் தேற்றுகிறவர்களனேகர். இஃதிவ்வாறிருக்க கலாகுமரர் வகுப்பில்கற்கும்இருவருள் ஒருவர் ஏதோ துர்ப்பாக்கியத்தால் தவறிவிடில், ஜெயித்தவர் தவறினோருக்கு ஆசானாக வந்துவிடுகிறார். இருவருள் ஒருவரைவிட ஒருவர் குறைந்திருக்க மாட்டாரானபடியின் வகுப்பின் ஆசான் ஒருவிதமாக பிதற்ற, சிடன் மறுவிதமா யிருக்கலாமெனக் குழற்ற,குருபக்தியற்றுப்போகிறது. குருபக்திக்கு நம் ஞாபகத்துள் நிற்க வேண்டிய புனிதன் ஏகலைவனே யாவன்.

தற்காலத்தே உலக நாடகமானது யாவரையும் தன் கைக்குள் அடக்குதல், நிகரற்றவனாக நினைத்து டாம்பீகமாக அலைதலும், தன்னலம் பெருகுதலும், ஆஜாடபூதிகாராக அலைவதுமாயிருக்கிறது. இதுவன்றித் துப்பாக்கி முதலியவைக்கொண்டு உயிர்ப்பிராணிகளை வதைத்தலும் இந்நாகரீக நாடகத்துள் சேர்ந்தது. இந்தியர் நாடகமோ மேல்நாட்டார் போல் முடியும் உடுப்பும் போட்டு நடிக்கவேண்டுமென்பதே. ஆனால் நன்மார்க்கத்திலல்ல. மேல்நாட்டாரோ தம்தேய மேன்மைக்காக உழைத்துத் தம்தேயப் பொருட்களை ஆதரித்துக் கைத்தொழிலை விருத்திசெய்து வருகிறார்கள். நம் நாட்டாரோ இவ் விஷயங்களில் அவர்களைப் பின்பற்றாது, அவர் தேச நிலைமைக்குத் தக்க அவர்கள் உண்ணும், உடுக்கும் வஸ்துக்களை உபயோகித்து வேஷங்கட்டி மோசம் போகின்றனர். இவ்விதமாக நாகரீக நாடகமிருக்கின்றபடியின், இனியேனும் நமது புராதன நாடகம் தலைகாட்டச் செய்வோமாக.

குறும்பர் வன்னியர் என்பதின் வரலாறு.

(செ. ப. உலகநாத நாடார், அருப்புக்கோட்டை.)

"ம-ள-ள-ஸ்ரீ சனம் பத்திராதிபர் அவர்களுக்கு வந்தனத்துடன் தெரிவிக்கும் நிருபம். க்ஷேமம். தாங்கள் சில மாதங்களுக்கு முன் குறும்பர்களுக்கும் வன்னியர் என்னும் பெயர் உண்டென நூலைக்காட்டி விளக்கியுள்ளீர்கள். ஆனால் அவர்களுக்கு வழங்கியதின் காரணத்தைத் தெரிவிக்கவில்லை. அக்காரணத்தை தங்களது மித்திரனிலேயே தெரிவிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்." என எமது நண்பர் ஸ்ரீமான் செ. ப. உலகநாத நாடார் அவர்கள் கேட்டுள்ளார். அவரது வினாவிற்கு விடை வருமாறு:—

எமது சமாதானம்.

வன்னியர் என்பது வன்னி என்னும் பகுதியடியாகப் பிறந்தது. "வன்னியே பி:மாச்சாரி வளர்கிளி சமிசந் தியாம்" என்னும் நிகண்டால் வன்னி என்பது பிரமாச்சாரிக்கும், கிளிக்கும், ஓர் மரத்திற்கும், தீயிக்கும் பெயரென வறியலாம். என்றாலும் அவர்களுக்கு வழங்கும் வன்னியர் என்பதின் மூலமொழி இப்பொருள்களைக் கொண்டதல்ல. அது 'வனம்' அல்லது 'காடு' என்னும் பொருளைக்கொண்டது. கிரந்த நிகண்டாகிய "நாமலிங்கானு சாஸனம்" என்னும் அமரநிகண்டில், (இத்விதீய காண்டம்) இரண்டாவது காண்டம், (சைலவர்க்கம்) மலைவர்க்கத்தின்கீழ், 53-வது சுலோகம்.

"வந்யா வநஸமூஹேஸ்யா
தங்குரோபி நவோத் பிதி."

(இ-ள்.) (கிரந்த டீகாவில்) "வன்யா இது வநஸமூஹெ - வந ஸமூஹத்துக்குப் பெயர். அங்குர:, அபிநவோத்பித் - இந்த 2-ம் புது முளைக்குப் பெயர்" என்பதாம். இச் சுலோகத்தில் வரும் வன்யா என்பதற்கு வனசமூகத்திற்குப் பெயர் என விளங்குகின்றது. அமரம் தெலுகு டீக்காவில் (உரையில்) வன்யா என்பதற்கு "வனசமூகமுனகு பேரு" என வெழுதப்பட்டுள்ளது. குருபால ப்ரபோதிகாவில் "வன்யா சப்தமானது வநஸமூகத்துக்குப் பெயர். வநாநாம் ஸமூஹோ வன்யா வனங்களுடைய ஸமூஹம்" என விளக்கப்பட்டுள்ளது. இவற்றால் "வந்யா" அல்லது "வன்னி" என்பதற்கு "வனம்" அல்லது "காடு" எனப் பொருள் கொண்டமை காண்க. குறும்பருக்குரிய "அரட்டர், வேளிர், புரோசர், குறுநில மன்னர்" முதலிய பெயர்களின் மூலமொழிகள் காட்டைத் தெரிவித்தலைப்போல்; 'வன்னியர்' என்னும் பெயரின் மூலமொழியும் காட்டைத் தெரிவித்தது. இவ்வகையை முன்னிட்டே இப்பெயர் குறும்பருக்கேற்பட்டது.

"(The Wanny) Two derivations are assigned to this word, one significant of the forest, which covers it to a great extent; the other of the intense heat which characterises the region." Vide Sir James Emerson Tennent's Ceylon, Vol. II, Part. IX, Ch. V, P. 508.

"வன்னி என்னும் இந்த வார்த்தைக்கு இரண்டு உற்பத்தியுண்டு. ஒன்று அதிக (மைல்) தூரம் சூழ்ந்திருக்கும் காட்டைக் குறிக்கும். மற்றொன்று அந்த இடத்தின் குணமாகிய சூட்டைக் குறிக்கும்." என்பதாம். இப்பகுதியாலும் வன்னி என்பது காடென விளங்குகின்றது. இந்த வன்னிக்காடு சிலோனில் அனுராஜபுரத்திற்கு அடுத்துள்ள ஒருபெரிய காட்டைக் குறிக்கும். அதை யானைக்காடெனவுங் கூறலாம். யானை அதிகமுள்ளது. யாம் சிலோனுக்குச்சென்றபோது ஸ்ரீமந்-வனுதிநாதநாயனாரது குலத்தலைவனாகிய ஈழராஜனது சமாதியைக்காண அனுராஜபுரம் சென்றோம். சென்று அவரது சமாதியையுங் கண்டோம். போட்டோ பிடித்தோம். அவரது பெருமையையும், சரித்திரத்தையும் இனி வரும் "ஈழராஜன் சரித்திரம்" என்னும் நூலில் காணலாம். அனுராஜபுரத்திலிருந்து சுமார் இருபது மைல் வன்னியக் காட்டூடே சென்றோம். அங்கு அக்காட்டில் வசிக்கும் வன்னியரையுங் கண்டோம். அவர்

கள் வேடர், இருளரைப் போன்றவர்களாகக் காணப்படுகின்றார்கள். வன்னியில் வசித்தலால் வன்னியர் எனப்பட்டனர்போலும். அவர்கள் ஒருகாலத்தில் அவ்வன்னியக்காட்டை யாண்டவர்களாம். அவர்கள் தற்காலம் அக்காட்டில் அகப்படும் தேன், கிழங்கு, மூலிகை வகைகளை நாட்டிற்குக் கொண்டுவந்து விற்கின்றார்கள். அவ்வன்னியரின் தன்மையை நாளதும் சிலோன் அனுராஜபுரம் சென்று பார்க்கலாம்.

"நாற்படை வன்னிய
ராக்கிய பெருமான்"

எனக் கல்லாடத்திற் கூறியதும் இவ்வகையினரையே! வேடர்கள் வனசஞ்சாரியாதலின் இப்பெயரைப் பெற்றனர். வன்னி=வனம், அல்லது காடு, அதில் சஞ்சரிப்பவர் வன்னியர் எனப்படுவர். அத்தகைய வேடத் தன்மையுடையவர்களையே ஜோதிசன் மந்திரிகளாக்கினமையின் "நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்" என்றார் கல்லாடர். ஒருபடையுமில்லாத வன்னியரை நான்கு படையை யுடையவராக்கினார் என்றார். அஃதல்லாமல் வன்னியர் இயற்கையிலேயே படையையுடையவரெனக்கூறின், ஆக்கினார் என்னுஞ் சொல் தொக்கி வருகின்றமையின் அப்பொருள்கொள்ள முடியாது. படையிலாதாரை படையை யுடையவராக்கினார் எனவே கொள்ளவேண்டி வரும்.

"பன்றிக் குறும்பர் பன்னிருவ
ரென்னச் சிறந்தார் படிமீது"

என திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல், 18-வது செய்யுளிற் கூறிய பன்றிக் குறும்பரையே, கல்லாடத்தில் நாற்படை வன்னியர் எனப்பட்டது. வன்னியர் என்பது வனசஞ்சாரிகளை விளக்கலைப்போல, குறும்பர் என்பதும் வனசஞ்சாரிகளையே விளக்கும். "குறும்பு பாலைக்கே கூற்றும்" என்னும் நிரண்டால் குறும்பு என்பது காட்டை விளக்கி, அதில் வசிப்பவரைத் தெரிவிக்கும். குறும்பர் என்பதும் வன்னியர் என்பதும் ஏக சப்தார்த்தம். இப்பன்னிருவரும் வேடத்தொழிலிலேயே மிக்குடையார் என்பதை, திருவிளையாடற்புராணம், பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த படலத்தில் "தந்தையுந் தாயுமாயத் தறுகண்மிக் குடையராகி, மைந்தரும் வேடரோடு கூடிவெங் கானில்வந்து, வெந்தொழில் வேட்டஞ் செய்வார்" எனவும்; "தொழுந்தொழின் மறந்து வேடத் தொழிலுழந் துழல்வீர்" எனவுங் கூறியபிரயோகங்களால் நன்குகாணலாம். இவற்றோடு திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், மெய்க்காட்டிட்ட திருவிளையாடல், 2-வது செய்யுளில்வரும் "தேங்குபுகழ் வன்னியர்க டலைவனாய சேதியர்கோ னென்பானோர் கிராதர் கோமான்" என்பதையும்; திருவிளையாடற் புராணம், மெய்க்காட்டிட்ட படலம், 4-வது செய்யுளில் வரும் "வல்வேடர்க் கதிபதியாய் வருசேதி ராயனெனும், வில்வேடனொருவனவன் விறல் வலியான் மேவிட்டு" என்பதையும் ஒன்று சேர்த்துப் பார்க்கவும். வன்னியரே வனவாசிகளென வறியலாம். இவற்றோடு வேடர்களும் ராயர் என்னும் பட்டப் பெயரை அக்காலத்து பெற்றிருந்தனரென வறிதல்வேண்டும். இவைகளால் வன்னியர் என்பது மந்திரிகளுக்குரிய பெயரெனவாவது, அல்லது அரசருக்குரிய பெயரெனவாவது நூற்களில் எடுத்தாளப்பட்டில்லையென வறியலாம்.

"Royal Asiatic Society Journal, Vol. 24. states that in the year 3300 of the Kalyuga, a Pandia Princess went over to Ceylon and married its king and was accompanied by sixty bands of Vannias."

"இராயல் ஏஷியாடிக் ஜர்னல் 24-வது வால்யத்திலே கலியுகாதி 3300 ஆம் வருஷத்திலே பாண்டிய ராஜகுமாரத்தி, 60 வன்னியக் கூட்டங்களுடன் இலங்கைக்குப் போய் அத்தேசத் தரசனை மணம் புரிந்துகொண்டாள்" என்பதாம். இப்பகுதியில் கூறிய வன்னியக் கூட்டத்தை மகாவம்ஸா என்னும் நூலில் வேலைக்காரர்கள் எனப்பட்டிருக்கிறது.

"Having bestowed many presents on their father..................With eighteen officers of state, together with seventy-five or sixty menial servants, being hor-

se-keepers, elephant-keepers, and chariotiars." Vide. The Mahavamsa, Part. I. ch. 8, P. 34.

"பாண்டியன் தன் பெண்ணுக்குத் தாதிகள் முதல் இன்னும் பலவித சீதனங்களையுங் கொடுத்ததோடு, 18-உத்தியோகஸ்தர்களையும், 60 அல்லது 75 குதிரை ஓட்டுபவர்கள், யானை ஓட்டுபவர்கள், இரதம் ஓட்டுபவர்களாகிய வேலைக்காரர்களையும் அனுப்பியுள்ளார்" எனக் கூறியுள்ளது. இதில் கூறிய அறுபது வேலைக்காரர்களையே ஏஷியாடிக் ஜர்னலில் அறுபது வன்னியர்களாவர்.

வன்னியர் என்னும் சாதிப்பெயரை யாம் தெரிவித்த குறும்பர், வேடர்களுக்கன்றி, இன்னும் சில சாதியார்களுக்கும் வழங்கி வருகின்றது. அவர்களாவார் "மறவர், கள்ளர், இருளர், பள்ளிகள்" எனப்படுவர். அவர்களது சாதிநூற்களும் ஒப்புகின்றன. இவர்களுக்கன்றி, அப்பெயர் வேறு சாதியார்களுக்கும் வழங்குமென (Thurston's Castes and Tribes of Southern India) தர்ஸ்டன் துரை அவர்களால் கூறப்பட்டில்லை. (பத்திராதிபர்.)

——(s)——

இளைஞர்களுக்கோர் விண்ணப்பம்.

(அ. சா. பழனிச்சாமி பாண்டியன், சின்னமனூர்.)

பிரியமுள்ள பாலியர்களே!

தொட்டிற்பழக்கஞ் சுடுகாடுமட்டும் என்னும் பழமொழி நீங்களறிந்ததே. நீங்களிப்போது என்னிலைமையி லிருக்கிறீர்களோ? நற்குணம், நற்செய்கை, கல்வி, தேகாப்பியாசம், ஊக்கம் முதலியவற்றை விருத்தி செய்கின்றீர்களா? இன்றேல், இன்றுமுதல் ஆரம்பியுங்கள். நீங்கள் தினம் பாலியராக யிருக்கமுடியாது. இன்னும் நான்காண்டில் யாவரும் வாலிபராகி விடுவீர்கள். அப்போது உங்களின் பின் சந்ததியார் உங்களைப் பிரகாசஞ் செய்யாதிருக்கும் பொருட்டும், உங்களின் நற்குண நற்செய்கைகளைக் கண்டு பின்பற்றும் பொருட்டும் நீங்களோ வழிகாட்டியாக வுதவவேண்டும். அப்பதவி யடைவதற்கு, நன்மார்க்கத்தில் இப்போதே உங்களைத் திருத்திக்கொள்ளுங்கள். பின்னர் வாலிபராகும் நீங்கள் பின் வயோதிகருமாவீர்கள் அக்காலத்து முங்களிடம் இவ்விளம்பிராயத்துக் குணமே இருக்குமாதலால் இத்தப்பருவமே மானிட ஜென்மத்தில் மிகுந்த ஜாக்கிரதையுடன் பேணவேண்டியதா யிருக்கிறது. எப்பிராயத்திலும் நீங்களனுட்டிக்க வேண்டியது சுத்தம். ஆனபடியின் கண்ட இடங்களிலெல்லாம் எச்சிலுமிழும் வழக்கமிருப்பின் விட்டு விடுங்கள். உங்கள் பாடசாலை கரும்பலகைகளை எச்சில் தடவிக் கழுவவேண்டாம். தபாற்பில்லைகளை உமிழ் நீரால் ஒட்டலாகாது. புத்தகத்தின் தாளில் எச்சிலை விரலில் தடவி நிவர்த்தாதேயுங்கள். அசுத்தமான இடங்களி லுட்காராதேயுங்கள். மிதிக்கவும் வேண்டாம்; அது காலில் சேற்றுக்கடியை யுண்டாக்கும். எச்சில் பதார்த்தங்களைத் தின்னாதிருங்கள். எச்சில் பதார்த்தம் புசிப்பதால் வாய்ப் புண் உண்டாகிறது. முன்கூறியது சாதாரணமாக நடந்துவரும் சிற்றுண்டிச் சாலைகட்குப் போவதைக் கூடியமட்டும் விலக்குங்கள். நித்தியம் ஸ்னானம் செய்யத் தவறாதிருங்கள். ஆடையை அழுக்கு நீக்கிக் கட்டுங்கள் முந்திய நாள் கட்டிய ஆடையை, ஸ்னானம் செய்து உடனே உடுத்திக்கொள்வதால் அதிலுள்ள நமது வியர்வையின் மாசு தேகத்தின் சூட்டுடன் ஒட்டி நம்மை அதிக அசுசிப்படுத்துகிறது.

பிரதிநாளும் அதிகாலையிற் படுக்கையை விட்டு எழும்புங்கள். அது தேக ஆரோக்கியத்தையும் மனோதிடத்தையும் கொடுப்பதோடு ஞாபகசக்தியை விருத்தியாக்கும். துயிலெழுந்ததும் முதலாவதாக தத்தம் குலக்கடவுளைத் தியானியுங்கள். பின்னர் காலைக் கடன்களாகிய மலோபாதை ஜலோபாதைகள் நீத்து, கை கால் முகம் சுத்தி செய்யுங்கள். எப்போதும் உங்களது கை, கால், முகம் மூன்றும் சுத்தமா

யிருக்கிறதா வென்று கவனியுங்கள். மாணவர்களே, காலையில் சந்தடியில்லா விடத்திலிருந்து வாசியுங்கள். அது மனதிற் பதியும். மற்றோர் இரண்டு மூன்று மைல் தூரம் உலவிவரலாம். அது மிகவும் தேக ஆரோக்கியம். காலையிலே கூடுமானால் ஸ்நானம் செய்துவிடில் தேகத்திற்கு மிக உத்தமம்.

எக்காரியத்தை ஆரம்பிக்கப் போயினும் முதலில் தெய்வவழிபாடு செய்யுங்கள். இது வேதமதமூதாதையர் கிரியையாகும் நாடோடிய பழக்கத்தில் பிறரைத் தானாகவே கருதுங்கள் பிறர்மனம் வருந்தும்படியாக யாதொன்றும் செய்யாதிருங்கள். எளியோரை எள்ளனம் செய்யாதிருங்கள். நாமும் ஓர் காலத்திலக்கதிபடையலாம். நாம் அரிச்சந்திரன், பாண்டவர், சோவிலன், முதலியவர்களை விட ஆஸ்திமான்களல்ல. ஜீவகாருண்யம் மனத்தில் கொள்ளுங்கள். உயிர்ப் பிராணிகளை ஹிம்ஸை செய்யாதேயுங்கள். ஒரு பிராணியையும் மனம் வருந்தச் செய்யவேண்டாம்.

எப்போதும் "தன்கையே தனக்குதவி" என வாழப் பிரயாசப்படுங்கள். தனக்குவேண்டிய ஆகார வகைகள் ஆடை முதலியவைகளைத் தானே செய்துகொள்ளுங்கள். நித்தியம் நாம் உபயோகிக்கும் பொருளுக்காக அந்நியருடைய ஆதரவை எதிர்பார்க்கவேண்டாம். மனச்சாட்சிக்கு விரோதமாய் யாதொன்றும் புரியாதீர். சத்தியமென்று தெரிந்ததற்கு விரோதமாய்ச் சட்டை செய்யாதீர். உண்மையென்று காணின், உலகம் பகைத்தபோதிலும் கைவிட வேண்டாம். பிறர் உங்களைப் புகழ வேண்டுமென்று எண்ணவேண்டாம். தமக்குத் தாமே அந்த நன்மை செய்தோ மிந்த உதவி செய்தோமெனத் திருப்தி செய்யப்பாருங்கள்.

கவலைப் படவேண்டாம், துன்பம் வரினும் சரி நம்மை என்ன செய்து போடும், என்று யோசித்து மனத்தைத் தேற்றுங்கள் சந்தோஷமாகவே யிருங்கள். சிறிது சங்கீதம் பழகியிருப்பீர்களானால் நல்லது பாடிப்பாடி துன்பத்தை மாற்றலாம் அல்லது பிறர் கீதத்தைக் கேட்டு மாற்றலாம். உற்சாகம் வந்தவுடன் பீடி, சிகரெட், பிடிக்க நினையாதேயுங்கள். அது யானை தன்மேல் மண்ணைப் போட்டது போலாகும். உங்கள் வாலைக் குறைத்துவிடும், கண்ணாடிகள் போட்டுக்கொள்ளுதல், வானத்தைப் பார்த்து நடத்தல் முதலிய ஆடம்பரங்களை அறவே தொலைத்துவிடுங்கள். எளியவர்களை ஈடேற்றுங்கள். யாவற்றிற்கும் மேலாக உங்கள் பெற்றோரைத் திருப்தி செய்யுங்கள். அவர்களாலியலாக் காலத்தில் அவர்களுக்குப் போஜன மூட்டுங்கள். ஜப்பான் தேச சிறுவர் போல் தன் தாய்நாட்டை விருத்திக்குக் கொண்டுவரும் முயற்சியில் உடல் பொருளாவி மூன்றையும் தத்தம் செய்யுங்கள். சுபம்!

———(o)———

முக்கியக் குறிப்பு.

(முன்தொடர்ச்சி.)

வங்காள டெக்கா ஜில்லாவில் பெக்ராம்பூரின் கடைசி அரசரும், அவரது குடும்பமும் மகமதிய படையெழுச்சிக்குப் பயந்து, அக்கினி குண்டம் வெட்டி அதில் விழுந்திறந்தார்களாம். அக்குண்டம் அரண்மனைக் கருகில் காணவும் காணப்படுகிறதாம். அதைப்போல் பாமரான் உதித்தெழுந்த அக்கினிகுண்டம் எங்குளதோ? அது கட்டுக்கதை யாயினமையின் எங்குமில்லை.

வங்காள டர்பங்கா ஜில்லாவில் கெக்ரயுல் என்னும் கிராமத்தில் சகரர்களை சபித்த கபில முனி வசித்திருந்த விடமாகக் கருதுகின்றனர்.

வங்காள மிதுனபூர் ஜில்லாவிலுள்ள தமொல்க் என்னும் ஊரில் விஷ்ணு கல்கி அவதாரமெடுத்து, இராக்ஷசனைக் கொன்ற இடமாகவும், விஷ்ணுவின் வேர்வை விழுந்த விடமாகவும் எண்ணப்படுகின்றது.

வங்காள முசபர்பூரி லுள்ள சிதா முரிபி என்னும் ஊரில் ஜனகர் கலப்பையைக்கொண்டு உழுது சிதையைக் கண்டெடுத்த விடமாகக் கருதப்படுகிறது.

வங்காள முர்ஷதாபாத்தில் பகிரதி என்னும்

ஊரில் கங்கையைவிட்டுப் பிரிந்து பகீரதநதி என்னும் பெயரைப்பெற்று பகீரதனது பிரமத் தியானத்தால் சகரர்களை எழுப்பிய இடமாக வெண்ணப்படுகிறது.

வங்காள நேப்பாளத்திலுள்ள கெட்டமண்டு என்னும்ஊருக்குகிழக்கிலுள்ள ஜனகாபுரத்தை சீதையின் தகப்பனாகிய சிரத்துவசன் தலைநக ராக்கிக்கொண்டுமிதிலை தேசத்தைபாண்டனர்.

பூர்வம் ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றாகிய ஒட்டரதேசம் என்பதையே தற்காலம் ஒரிஸா என வழக்கப்பட்டு வருகிறது.

பூர்வம் ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றாகிய மகததேசம் என்பதையே தற்காலம் பேட்னு என வழைக்கப்படுகின்றது.

வங்காளம் பேட்னு ஜில்லாவிலுள்ள ராஜகிரி என்னும் மலையையே பாரதகாலத்தில் ருஷிய கிரி எனவும், கிரிப்ராஜா எனவும் அழைக்கப்பட் டது. இப்பிரதேசம் மகததேசத்திற்குத் தலை நகராகவும், பாரதத்தில் கூறப்படும் ஜராசந்தன் ஆண்ட இடமாகவுமுள்ளது. இந்த இராஜகிரி என்னும் மலையிலுள்ள ஒரு குகையையே கவு தமபுத்தர் தியானஞ்செய்தற்கு இடமாகக் கொண்டனர்.

வங்காளத்திலுள்ள ராங்கபூர் பாரதத்தில் கூறப்படும் பகதத்தன் வசித்த இடமாகக் கொள்ளப்படுகிறது.

வங்காள சாரான் ஜில்லாவிலுள்ள சன்பூர் என்னும் கிராமம் விஷ்ணு ஆதிமூலமே என வழைத்த ஐராவதத்தைக் காப்பாற்றிய இட மாகும்.

வங்காள ஷஹாபாத் ஜில்லாவிலுள்ள பக் ஸார் என்னும் ஊரை வேதகர்ப்பமெனப்படும். வேதத்திலுள்ள பல பாகங்களை எழுதிய ருஷி கள் வசித்த இடமாகக் கருதப்படுகிறது.

கல்கத்தாவுக்கு ஒருமைல் தூரத்திலுள்ள பாரனகூர் என்னும் பட்டணம் விஷ்ணு பன்றி அவதாரம் எடுத்த இடமாகும்.

பம்பாய் கைக்வார்ஸ்டேட்டில் மாவால் கிரா மத்தில் ஒரு பெரிய குளம் உண்டு. அக்குளம் பாண்டவர்காலத்தில்மாயூரத்துவஜனுல்கட்டப் பட்டதாம்.

பூர்வம் ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றாகிய சிந்துதேசத்தை தற்காலம் ஹைதராபாக்கம் என வழைக்கப்படுகின்றது.

பம்பாய் கைரா ஜில்லாவிலுள்ள லசுந்தாம் என்னும் கிராமத்தில் இராமர் தனது தகப்ப னர் தசரத சக்கரவர்த்திக்கு சிரார்த்தம் கொடுத்த இடமாக எண்ணப்படுகிறது.

பம்பாய் வடகன்னடம் ஜில்லாவிலுள்ள கோகரணம்ஊரில்சிவபிரான் இராவணனுக்குக் கொடுத்த லிங்கம் இருப்பதாகச் சொல்லப் படுகிறது.

———(o)———

தர்ம சாஸ்திரம்.

(பிரம்மவித்யா.)

சற்றும் வேதத்தைப் படியாமலும், தர்ம சாஸ்திரம் யாதொன்றையும் அறியாமலும் புராணங்களைப் பாராமலும், பெரியோர் ஆசா ரங்களை எவ்விதத்தும் அநுஷ்டிக்காமலும், பண்டித கோஷ்டியில் பிரவேசியாமலும், அற குறைய தர்மசாஸ்திர வசனங்களைக் கேட்டும் கேளாமலும் பண்டிதர்சொன்ற நடிக்கும் இக் காலத்திய சிலர், அருமையான தர்மசாஸ்திர விஷயங்களில் புகுந்து விவாதஞ் செய்வதும், தனக்குந் தோன்றியபடி அதனை மாறுபடப் பொருளுரைப்பதும், அவற்றுள் சிலவற்றை அவியுடன் மாற்றுவதுமே தொழிலாகக் கைக் கொண்டிருக்கிறார்கள். அன்றி பெரியோர் மேலான ஆசாரக் கொள்கையையும் ஆபாஸப் படுத்துகிறார்கள். அந்தோ! யாருரைப்போம்! எந்த யுகத்தில் எந்தருமங்கள், எவ்வருணங்கள் எவ்வண்ண மிருக்கின்றனவோ, அவைகளை யுகத்திற்குத் தக்கவாறு நிந்திக்கக்கூடாதென்று பராசரர் கூறியபடி மேற்கூறிப்போந்தவைகளை யாம் நிந்திக்கவந்தோமில்லை. பின் எடுத்தோ தும் வினுக்களுக்கு விடைகளை வேதங்களை ஓதிய எந்த ஆஸ்திக சிரேஷ்டர்கள் விரும்பு

கிறார்களோ! அவர்களுக்கென தர்மசாஸ்திர விஷயங்களை விசாரிக்கப்புகுவாம் அவையாவன:

தர்ம சாஸ்திரமாவது என்னை? எவ்விதம் அது உண்டாயிற்று. அஃது பிரமாணந்தானு? வேதத்திற்கு ஒத்ததா? அல்லவா? வேதத்தைப் போலப் படிக்கவேண்டுமோ ஸ்மிருதிகள் எத்தனை? உபஸ்மிருதிகள் எவ்வளவு? அவைகளைச் செய்தவர்கள் யாவர்? கற்பசூத்திரங்களாவன எவை? எவ்விதம் ஸ்மிருதிகளுக்கும் சூத்திரங்களுக்கும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை? ஸ்மிருதிகளுக்கு விரோதம் நேரிடின் எவ்விதம் தீர்மானஞ் செய்தல் என்பன.

மேற்கூறியவைகளுக்கு முறையே
விடையளிப்பாம்:

1. தர்மசாஸ்திரமாவது தர்மத்தை வெளியிடுகிற நூலெனப்படும். அன்றித் தர்மத்தை அறிவிக்கும் வேதம், ஸ்மிருதி, சூத்திரம், புராணம், ஆகமம் என்னும் பொருள்படும். என்றாலும் போகளுடைத்தால் மனுஸ்மிருதி முதலியவைகள்தான் அப்பெயரை வகிக்கின்றன. (2) தர்மமென்பது வாக்குக் கருமங்கள் இவைகளாலுண்டாகிய சுவர்க்க மோக்ஷங்களுக்குக் காரணமாயிருக்கின்ற அருமையான ஆத்மாவின் குணம். அது மனு கூறியபடி காமக்குரோதங்களை யொழித்த அறிஞர்களால் உள்ளன்புடன் யாண்டும் நடாத்தப்பட்ட ஆசார தர்மமென்றும், சிரௌத தர்மமென்றும், ஸ்மார்த்த தர்மமென்றும் மூவகைப்படும். இம்மூன்றினையும் அந்தணன் பயிலக்கடவன்.

3. யாக்கியவல்கியர் கூறியவாறு குருக்ஷேத்திர முதலிய க்ஷேத்திரங்கள், கிரகண முதலிய காலங்கள் சாஸ்திரத்தில் கூறியபடி செய்ய வேண்டிய ஏற்பாடுகள், நெய் பால் முதலிய யாகவஸ்துக்கள், ஆஸ்திகவெண்ணம், ஸத்பாத்திரதான முதலிய இவைகளும் இன்னும் மற்றவைகளும் தர்மத்திற்கு அங்கமாம். 4. தர்மம் ஆரியர்களால் புகழப்பட்டதென்றும் அதர்மம் இகழப்பட்டதென்றும் விசுவாமித்திரர் கூற்று. அன்றி மோக்ஷத்திற்குக் கிட்டியதும் விலகியதுமாயுள்ள சாதனமான மெய், புலன் அடக்கம், தவம், சந்தோஷம், வெட்கம், பொறுமை, நல்வழியிலிருத்தல், ஞானம், மன அடக்கம், தயை, யாகம், பெரியோரை வழிபடல், வேதமோதல், தானம், ஆசாரம், அஹிம்ஸை, ஈசுவரத்தியானம், ஆகிய இவைகளும் தர்மங்களென்று வியாஸர், பிருஹஸ்பதி இவர்கள் கூற்று. தர்மசாஸ்திரத்தின் உற்பத்தி:—மனு, மரீசி, பராசரர் இவர்கள்கூறியபடி வேதங்களை ஆராய்ந்து பார்த்து வேதத்திற் கூறிய சொற்கள் ஆழ்ந்த கருத்துடையன வாதலின் எல்லோரும் எளிதிலறியும்பொருட்டு அவ்வேதார்த்தங்களை மனு முதலியவர்கள் கற்பந்தோறும் ஸ்மரிப்பதே. ஆதல்பற்றித் தருமசாஸ்திரத்தை ஸ்மிருதியென்று கூறுகிறார்கள். அந்த ஸ்மிருதியானது வியாசர், ஹாரீதர் சொல்லுகிற பிரகாரம் அநாதியான வேதம்போலவும் அவ்வேதவித்துக்கள் ஆசாரம்போலவும், தருமத்தின் மூலாதாரமான முக்கியப் பிரமாணமாம். மனு முதலிய ஆன்றோர் திருவாக்கு நோயாளிக்குக் கிடைக்கும் அருமருந்துபோல பவப்பிணி நீக்கும் பெருமருந்தென வேதம் சாற்றுதலாலும் புறச்சமயிகளின் நூல்களை ஆராய்ந்து அவ்வழி நின்று நியாயவழி கடந்த சார்வாகர் முதலியோர் சொற்கள் நம்மைக்கெடுக்கும் வஞ்சனை மொழிகளென்று அவைகளை யொழித்திட வேண்டுமென்றும் எடுத்தோதும் பிரசேதஸ் முதலிய ஆன்றோர் வசனங்களாலும் மனு முதலியோர் கூறிய ஸ்மிருதிகளே உண்மை நூல்களெனவும் அவைகளே வேதங்களின் வழி நூல்களெனவும் கொள்க. மற்று பௌத்தர் முதலியவர்கள் கூறுவது வேதவிருத்தமென்க. வியாசர் கூறியபடி அந்த ஸ்மிருதியை அந்தணர்கள் மனச் சுத்தியுடன் வேதத்தைப்போல் எப்பொழுதும் படிக்கவும் கேட்கவும் பார்க்கவும் வேண்டும். வேதம் ஸ்மிருதி இவைகளை யறியாதவர்களுக்குச் செய்யும் தானமும் அளிக்கும் போஜனமும் ஏனைய எவ்வித மரியாதைகளும் பயன்படாதென்க. அன்றி வேதங்களும் தர்ம சாஸ்திரங்களும் அந்தணர்களுக்கு இரண்டு கண்களாம். இவைகளிரண்டில் ஒன்றைப்படித்தால் ஒற்றைக் கண்ணுள்ளவனென்றும் இரண்டையு மறியாவிடில் அந்தகனென்றுங் கூறப்

பாலது. ஸ்மிருதிகள் 18. அதைச் செய்தவர்கள் மனு, பிரகஸ்பதி, தக்ஷர், கௌதமர், யமன், அங்கிரஸ், யாக்கியவல்கியர், பிரசேதஸ், சாதாதபர், பராசரர், சம்வர்த்தர், உசனஸ், சங்கர், லிகிதர், அத்ரி, விஷ்ணு, ஆபஸ்தம்பர், ஹாரிதர் ஆகிய இவர்களே. அங்ஙனமே உபஸ்மிருதிகளும் அதனைச்செய்தவர்கள்:---ஜாபாலி, நாசிகேதர், கந்தர், லோகாக்ஷி, காசியபர், வியாசர். சனத்குமாரர், சந்தனு, ஜனகர், வியாக்ரர், காத்தியாயனர், ஜாதூகர்ணர், கபிஞ்சலர், போதாயனர், காணுதர், விசுவாமித்திரர், பைடீனஸி, கோபிலர், முதலியவர்களாம். அன்றி வசிஷ்டர், நாரதர், ஸுமந்து, பிதாமகர், பப்ரு, கார்ஷ்ணாஜினி, சத்தியவிரதர், கார்கியர், தேவலர், ஜமதக்னி, பாரத்வாஜர், புலஸ்தியர், புலஹர், க்ரது, ஆத்ரேயர், சாகலேயர், மரீசி, வத்ஸர், பாரஸ்கரர், ரிஸ்யசிருங்கர், வைஜாவாபர் என இருபத்தொரு ஸ்மிருதிகர்த்தர்கள். இவர்களெழுதிய தர்ம சாஸ்திரங்களைத்தும் எக்காரணத்தாலும் தள்ளப்படாது கொள்ளற்பாலன வென்பது மூதறிஞர் முதுமொழி என்க.

அங்கனமே சூத்திரங்களும் 18. அவையாவன:—போதாயனம், ஆபஸ்தம்பம், ஸத்தியாஷாடம், திராகியாயனம், அகஸ்தியம், சாகல்பம், ஆசுவலாயனம், சாம்பவீயம், காத்தியாயனம், வைகானசம், சௌனகீயம், பாரத்துவாஜம், ஆக்கினிவைசியம், ஜைமினீயம், மாதன்யம், கௌண்டின்னியம், கௌஷீதகம் என்பனவாம். இச்சூத்திர கர்த்தர்களும் மனு முதலியோர் எடுத்தோதிய பொருள்களையே மந்திரமாகச் சொல்லியிருக்கிறபடியால் சூத்திரங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் ஒற்றுமையேயன்றி விரோதம் எட்டுணையுமின்றென்க. எங்கு ஸ்மிருதி ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றதோ அங்கு பின் கூறுமாறு நிர்ணயம் செய்யவேண்டும். எங்ஙனமெனில், சூரியோதயகாலத்திலேஹோமஞ் செய்யவேண்டுமென்றும், அல்லது உதயத்திற்குமுன் செய்யவேண்டுமென்றும், அதிராத்திரமென்னும் யாகத்தில் ஷோடசி என்பதைக் கிரகிக்கலாமென்றும் அல்லது கிரகிக்கக்கூடாதென்றும், கூறிய விதிவாக்கியங்களால்தோன்றிய வேதத்தின் முன்பின் விரோதத்தில் கல்பசூத்திர விதிப்பிரகாரம் இன்னின்ன சூத்திரத்தைச் சேர்ந்தவர்கள் உதயத்திற்குமுன் ஹோமமுதலியனவைகளைச் செய்யலாமென்றும் மற்றவர் உதயத்திற்குபின்ஹோமமுதலியனவைகளைச் செய்யலாமென்றும் எவ்விதம் பகுபாடுள்ளதோ அவ்விதமே ஸ்மிருதிகளின் விரோதத்திலும் ஸுமந்துவின் வசனப்படி தேச வழக்கத்தையேனும், அல்லது கால வழக்கத்தையேனும், அல்லது குலாச்சாரவழக்கத்தையேனும் கொண்டே தீர்மானிக்கவேண்டும். அன்றி அம்மான் பெண்ணை விவாகம் பண்ணலாமென்கிற விதிவிந்தியத்திற்குத் தெற்கிலும் அங்ஙனங் கூடாதென்கிற நிஷேதம் அதற்கு வடக்கிலுமிருப்பதற்குத் தேசாசாரமே காரணமும், மாம்சங்களால் சிரார்த்தஞ் செய்யவேண்டுமென்கிற விதி மற்றைய மூன்று யுகங்களிலும் கூடாதென்கிற விதி இக்கலியுகத்திலுமிருப்பதற்குக் காலத்தின் வழக்கமும், பின் குடுமி முன் குடுமி நாமம் விபூதி இவைகளைத் தரிக்கிறவர்களுக்குக் குலாசாரமும் மூல காரணங்களாம். எவ் விஷயத்திலேனும் பெரியோர்களின் ஆசாரங்கள் விரோதப்பட்டதென்று புலப்படின், எத்தேசத்திலாவது எக்காலத்திலாவது எம்மகானிடம் காமக்குரோதம் உண்டாகாது மேன்மையான குணம் தோன்றுகிறதோ அம்மகானுடைய ஆசாரத்தையே முக்கியமாய்க் கிரகித்துக்கொள்ள வேண்டுமென்று தைத்திரீயோபநிடதம் சாற்றுகின்றது. (இன்னும் வரும்.)

ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம்.

தபால் சார்ஜ் உள்பட ரூபா 1—8—0.

கொஞ்சம் காப்பிகளே கையிருப்பு.

திருவள்ளுவனார் வரலாறு.

(உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர், தாய்நாட்டில் எழுதுகிறார்.)

———(o)———

ஆசிரியர் பிறப்பு.

திருக்குறள் நூலாசிரியரான திருவள்ளுவனார் தம் பிறப்பு முதலான வரலாறெல்லாம் நம் தமிழகத்தில் தொன்றுதொட்டுப் புலவராயினருள்ளும் சாமானிய மக்களுள்ளும் செவிவழக்காகப் பலவாறு உலவிவாரா நிற்கின்றன. அவர் தம் தந்தை பகவன் என்றும், தாய் ஆதியென்றும், அவருள் பகவன் என்பவர் அகத்தியனார் மகனாகிய பெருஞ்சாகான் என்றும் பிராமணருக்குத் திருவாரூர்ப்புலைச்சியொருத்திபால் பிறந்தவர் என்றும் மற்று ஆதி என்பவள் தவமுனி யென்னும் பிராமணருக்கு அருள் மங்கை யென்னும் பிராமணமாதுவிடம் பிறந்து கருவூர்ப் பெரும்புலையன் ஒருவனால் வளர்க்கப்பெற்று நீதியையன் என்னும் ஒரு பிராமணன் வீட்டில் வேலை செய்துவந்தாள் என்றும் கூறப்படுகின்றன.

ஆசிரியர் திருவள்ளுவனாருடைய தாய் தந்தையர் ஆதியும் பகவனும் என்பது அவர்தம் உடன்பிறந்தார் எனப்படும் கபிலர் என்பவர் பாடியதாகச் சொல்லப்படும் அகவலின்கண்

"அருந்தவமாமுனியாம்பகவற்குக்
கருவூர்ப்பெரும்பதிகட்பெரும்புலைச்சி
ஆதி வயிற்றி னின்றவதரித்த
கான்முளையாகிய கபிலனும் யானே"

என்பதனால் அறியப்படுகின்றது. இனிப் பழைய தொருநூலாகிய "ஞானாமிர்த"த்தில்

"யாளிகூவத்தன்றெம் ஆதப்புலைச்சி
காதற்காசினி யாகிடத் தனி
இன்னிசையெழுவர் பயந்தோளீன்றே"

என்று பகரப்பட்டமையின், அப்பகவன் தந்தை யாளித்த முனிவர் என்று வேறொரு பெயர் வழங்கிய தென்று தெரியப்படும். அவ் யாளித்தர் பார்ப்பனரென்று சிலரும், வணிகர் என்று வேறு சிலரும் கூறுவர். அவருக்குப் பேராளிமாமுனிவர் என்னும் மற்றுமொரு பெயர் உண்டென்றும் சொல்லப்படுகின்றது. ஆதி என்பது காரணப்பெயரென்றும், அதற்கு அறிவில்லாதவள் என்பது பொருள் என்றும் ஒரு சிலர் கூறுவர். திருவள்ளுவனாருடைய தாயானவள் அறிவில்லாதவள் என்பது பொருந்துமோ; சிறிது சிந்தனை செய்யின்.பேர் அறிவுடையாரைப் பெற்றெடுத்த ஒரு அம்மையார் அறிவு சான்றவரேயாதல் வேண்டுமன்றோ? ஆதி என்பதற்கு "மகளிர்க்குரிய கள்ளங் கபடு முதலான வீ.கறியாது, வெள்ளைமையுடைய உள்ளம் உடையார்" என்றே பொருள் கூறலாம் என்பது உயர்திருசுவாமி வேதாசலம் அவர்கள் கருத்தாகும். அச்சொல்லுக்கு ஆதரவில்லாதவள் என்றும் பொருள் சொல்லுவர் வேறு சிலர். இவையேயன்றி, பகவன் கருவூர்ப் புலையனால் வளர்க்கப்பெற்ற அப்பெண்ணை இரண்டாம் முறையாகக்கண்டு மணந்துகொண்ட பின், "ஆ! நீ ஆதியள் அல்லளோ?" என்று கூறி வெருண்டு ஓடினமையால், அவளுக்கு ஆதி என்றபெயர் வரலாயிற்று என்பாரும் உளர். அவ்வாதிக்குப் பெரியாள் என்ற வேறு பெயரும் உண்டு. இனி அந்தப்பகவன் பார்ப்பனரல்லரென்பதும், மற்று அவர் பௌத்த சமயத்தினரென்பதும் சிலர் தம் கருத்துகளாகும். வேறு சிலருக்குத் திருவள்ளுவர் பறைச்சிக்கும் பார்ப்பானுக்கும் பிறந்தார் என்பதும் உடன்பாடன்று.

இனி, அப்பகவனும் ஆதியும் மணஞ் செய்து கொண்ட பின்னர், அவர்கள் ஓர் ஊரிலேயே வைகுதலின்றிப் பல ஊர்களுக்குப் போந்து ஆங்காங்குச் சில நாட்கள் தங்கினரென்றும், அவ்விடங்களில் அவர்களுக்கு ஆண் பெண் குழவிகள் பிறந்தனவென்றும், அக்குழந்தைகளை அவர்கள் அந்தவிடங்களிலேயே மகப் பேறின்றி வருந்தியிருந்தவர்களுக்கு நல்கிப் போய்விட்டனரென்றும் அப்பிள்ளைகள் தம்முள் ஒருவர் தாம் திருவள்ளுவனாரென்றும், அவர் நான்முகனுடைய அவதாரமென்றும் கதை வழங்குகின்றன. இவ்விவரங்களை யெல்லாம் அப்பிள்ளைகளுள் ஒருவராகிய கபிலர் என்பார்.

"அருந்தவ மாமுனியாம் பகவற்குக்
கருவூர்ப் பெரும்பதிக்கட் பெரும்புலைச்சி
ஆதிவயிற்றினி லன்றவதரித்த
கான்முளையாகிய கபிலனும் யானே;
என்னுடன் பிறந்தவர் எத்தனை பேரெனில்
ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்
யாம் வளர் திறத்தினி யானியம்புவல் கேண்மின்
ஊற்றுக் காடெனும் ஊர்தனிற் றங்கியே
வண்ணாரகத்தில் உப்பை வளர்ந்தனள்
காவிரிப் பூம்பட்டினத்திற் கள்விலைஞர் சேரியிற்
சான்றாரகத்தில் உறுவை வளர்ந்தனள்;
நரப்புக்கருவியோர் நண்ணிடுஞ்சேரியிற்
பாணரகத்தில் ஔவை வளர்ந்தனள்;
குறவர் கோமான் கொடிச் சினைப்புனஞ்சூழ்
ம், தொண்டைமண்டலத்தில் வண்டமிழ்ப்பயிலையிற்

பறையரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்;
அரும்பார் சோலைச் சுரும்பார்வஞ்சி
அதிகமானில்லிடை யதிகமான் வளர்ந்தனன்
பாரூர் நீர்நாட் டாரூர்தன்னில்
அந்தணர்வளர்க்க யானும் வளர்ந்தேன்"

என்று தாமே கிளர்ந்துரைத்த தம்முடைய வரலாற்றினால் அறியப்படுகின்றன.

இனி, இவ்வரலாற்றை நணுகி ஆராயுமிடத்து, திருவள்ளுவனுருடைய தாய் தந்தையர் பெயர்கள் ஆதியும் பகவனும் என்பன மறுக்கப்படற் பாலனவாம். என்னை? "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற வண்ணம் திருவள்ளுவனாரே தம் "திருக்குறள்" நூலின் முதற்கண்.

"அகாமுதல வெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றே யுலகு" என்று தம் அன்னை ஆதியையும் தந்தை பகவனாரையும் அன்போடு நினைவு கூர்ந்து தொழுவாராயினாரன்றே? எனின், அவர் தம் தாய்தந்தையரை உலகிற்கு முதல்வரெனக் கூறினாரென்பது நேரிதன்று. அன்றியும் "ஆதிபகவன்" என்னும் இடையில் உம்மையில்லாத அவ் உயர்திணைச் சொற்கள் இரண்டும் "ஆதிபகவர்" என நிற்றல் வேண்டும். ஆகவே, "ஆதிபகவன்" என்றது அவர்தம் தாய் தந்தையரைக் குறித்தலின்றி, முதற்கடவுளையே கருதி வணங்கினதாகும் எனவே, "ஆதிபகவன்" என்னுஞ் சொற்றொடர் திருவள்ளுவனுருடைய தாய்தந்தையின் பெயரெனத் திரிபுபடக் கருதப்பட்டதாகும் என்பது தெற்றெனத் தெரியப்படும்.

ஆசிரியர் வளர்ப்பு:

இனித் திருமயிலையில் பிறந்த ஆண் மகவை அவ் வாதிபகவர் அந்தத் தம்பால் போந்து அன்பும் பணிவும் உடையவனாய் ஒழுகிய வள்ளுவன் ஒருவனிடத்துக் கொடுத்துப் போயினரென்று கன்னபரம்பரைக் கதை ஒன்று வழங்குகின்றது. அவ்வாறன்றி, அவ் வாதிபகவர் அத்திருமயிலையின்கண் மகப்பேறின்றி மனம் புழுங்கிக் கொண்டிருந்த ஒரு வேளாளர் மட்டு இரக்கமுற்று அவருக்கே அம்மகவை ஈந்திட்டுச் செல்வாயினரென்றும், அக் குழவியைப் பொன்னே போற் போற்றி வளர்த்தவழி, அவர் தம் உறவினர் பலரும் அதனைக் கண்ணுற்று, "ஓ! ஓ! யாரோ இழிகுலத்தினர் பெற்றுப் போட்ட பிள்ளையை இவன் எடுத்து வளர்க்கிறானே! இவன் புத்தி என்ன! என்று பழிவுரை தூற்றிடவே அவ்வேளாளர் அக் குழந்தைகளைத் தம்மிடத்து உழவு தொழில் செய்துவந்த வள்ளுவன் ஒருவனை அழைத்து அவன் கையில் அக் குழந்தையைத் தந்தனரென்றும், அவ்வள்ளுவன் அப் பிள்ளையைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்தனனென்னும் மற்றுமொரு கன்னபரம்பரைக் கதை உரைக்கப் படுகின்றது. இவைபோன்றி பிள்ளைக்கலியால் வருத்தமுற்றிருந்த ஒரு வெள்ளாளப் பெண் அப்பிள்ளையை மயிலை இலுப்பைத் தோப்பில் கண்டெடுத்து ஆசையோடு வளர்த்து வந்தாளென்றும், அது கண்ட அவள் தம் உறவினர் கூறிய பழிமொழிக்கஞ்சி அவள் அதனைக் கைவிட, பின் அப்பிள்ளையை வள்ளுவன் ஒருவன் வளர்த்தானென்றும் பின்னுமொரு கதையுளது. இக்கதைகளுக்கேற்பவே, "கபிலர் அகவ" லும் பாடபேதங்கள் உடையதாய் உளது.

அவற்றுள் ஒரு பாடம்.

"தொண்டை மண்டலத்தில் வண்டமிழ் மயிலையில் துள்ளுவரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்."

மற்றொரு பாடம்.

"தொண்டைமண்டலத்தில் வண்டமிழ் மயிலையில் கிளாண்மை கொள்ளும் வேளாண்மரபுயர் துள்ளுவரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்."

இன்னுமொரு பாடம்.

"தொண்டை மண்டலத்தில் வண்டமிழ் மயிலையில் பறையர் வீட்டில் வள்ளுவர் வளர்ந்தனர்."

பின்னுமொரு பாடம்.

"தொண்டைமண்டலத்தில் வண்டமிழ் மயிலையில் வள்ளுவர் மனையிடை வள்ளுவர் வளர்ந்தனர்."

இவையே யல்லாமல் திருவள்ளுவர் தென்மதுரையில் பிறந்து வளர்ந்தவர் என்றும் மொழியப்படுகின்றது.

இனி, கபிலரைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்க்குமிடத்து. கபிலர் என்னும் பெயரினர் நால்வர் அறியப் படுகின்றனர். அவராவார்; புராணங்களில் சொல்லப்பட்ட கபிலமுனிவர், சாங்கிய நூல் செய்திட்ட கபிலர், குறிஞ்சிப்பாட்டுப் பாடிய சங்கப் புலவராகிய கபிலர், "மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை," "சிவபெருமான் திருவந்தாதி' முதலாயின இயற்றியருளிய கபிலதேவ நாயனார். கபிலர் என்னும் பெயருடைய புலவர்களால் தனித்தனியே செய்யப்பட்ட நூல்கள் வேறு வேறாக இருப்ப, எத்தனையும் ஆராய்ந்து பார்க்குந் தன்மையில்லாத தமிழ்ப் புலவர்கள் ஒரே கபிலரால் எல்லா நூல்களுஞ் செய்யப்பட்டனவென்று எண்ணுவர். வட இந்தியாவிலும், ஒரே பெயருடைய கவிகள் இருவர் மூவர் இருப்பினும், அதனைச் சோதித்து அறியாத வித்துவான்கள் எல்லாக் கவிகளும் ஒருவராலேயே செய்யப்பட்டன வென்பர். உதாரணமாக, காளிதாசர் என்னும் பெயருடையார் இருவர் இருந்தனர். ஒருவர் விக்ரமார்க்க மன்னனது சமஸ்தான பண்டிதராயிருந்து, "சாகுந்தலம்," "விக்ரமோர்வசியம்," "மாளவிகாக்னி மித்ரம்" என்

னும் நாடகங்களையும், "ரகுவம்சம்," 'மேகசந்தேசம்', "குமாரசம்பவம்', என்னும் காவியங்களையும் இயற்றியவர். மற்றவர் போஜராஜனது சமஸ்தானத்தில் இருந்தவர். அவர் "நளோதயம்," "சிங்காரதிலகம் "போஜம்பு," "சமளாதாண்டகம்" முதலான நூல்கள் செய்வாராயினர். இவ்விருவரையும் ஆராய்ச்சியுணர்வில்லாத பண்டிதர்கள் ஒருவரெனவே கொண்டு குழப்பிவிடுவர்.

கபிலர் நால்வரில் சங்கப்புலவராகிய கபிலர் பாண்டிய மன்னன் ஒருவனாலே போரில் பற்றிக்கொண்டு வரப்பட்ட ஆரியவரசன் பிரகத்தன் என்பானுக்குத் தமிழ்ச்சுவை அறிவுறுத்தும் பொருட்டுப் "பெருங்குறிஞ்சி" என்னப்படும் 'குறிஞ்சிப்பாட்டு' ஒன்றும், மற்றும் பொதுவாக 'இன்னா நாற்பது' என்னும் ஒழுக்க நூல் ஒன்றும் பாடினமையே யல்லாமல், தீஞ்சுவைத் தனிப்பாட்டுக்கள் பல பாடுவாராயினர். அவை 'அகநானூறு' 'புறநானூறு' 'ஐங்குறுநூறு' 'பதிற்றுப்பத்து' 'கலித்தொகை' 'நற்றிணை' 'குறுந்தொகை' முதலானவைகளின் கண் உள்ளன.

(இன்னும் வரும்.)

—(o)—

உயிர்வதை நீத்தல் வினாவும் விடையும்.

(க்ஷத்திரிய மித்திரன், மலர். 5, இதழ், 2-ல் "உயிர்வதை நீத்தல் வினா" விற்குக் கீழ், சிவகாசி. பா. கெ. தங்கசாமி நாடாரா லெழுதிய பதின்மூன்று வினாக்களுக்கு, டிசம்பர்மீ ஆனந்தபோதினியில் வந்தவிடை.)

வினா.

சிலர் இத்தகை கேள்விகளைக் கொண்டு கொன்று தின்பதில் பாபமில்லையெனத் தீர்மானிக்கக் கருதுகிறார்கள். ஆகையால் இதைப் பற்றி வரையவேண்டியது அவசியமெனத் தோன்றியது.

மேற்கண்ட வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் விடை யளிப்பதாயின் கூறியவையே கூற வேண்டி வரும். இப்பதின் மூன்று வினாக்களையும் பின்காணும் சிந்தாறு வினாக்களி லடக்கிவிடலாம்:—

1. எல்லாம் ஆன்மாக்களா யிருக்க மிருக பட்சிகளைக் கொன்றால் மட்டும் பாபம், தாவரங்களைக் கொன்றால் பாவமில்லை என்பதெப்படி?

2. பசுவைக் கொன்று தின்றால் பாவமெனின் அதன் பாலை யருந்துகிறோமே அது இரத்தமல்லவா?

3. நாம் அருந்தும் ஜலத்தில் அனேகம் கிருமிகளிருக்கின்றனவே, அதனால் பாவமில்லையா?

4. வேதத்தில் யாகம் செய்யும்போது பலி கொடுக்கச் சொல்லியிருக்கிறதே. அது கொலையல்லவா?

5. கொல்லாமை எம்மதக் கொள்கை? நாயனார் துறவறத்தார்க்குமட்டுந்தானே கூறினார்?

6. சைவன் என்றால் எவ்வளவு துஷ்டனாயிருந்தாலும் மாமிச போஜனத்தை மட்டும் நீக்கிவிட்டால் சைவன் ஆகி விடுகிறானா?

விடை.

1. ஆன்மசொரூபம் எங்கும் ஆகாயம்போல் உள்ளும் புறம்பும் வியாபித்தே யிருக்கிறது. அது இல்லாத விடமில்லை. கல்லில் அது இருந்திராவிட்டால் பிரகலாதனுக்காக கற்றூணிலிருந்து பகவான் தோன்றியிரார்.

இப்போது புலாலுண்ணல் பாபம் என்பது எதனாலெனில் அதற்காக ஒன்றைக் கொலை செய்வதால்தான். ஒரு ஜீவனைக் கொலை செய்வதால் அது எவ்வளவோ பீதியும் சொல்லொணா இம்சையும் அடைகிறது. இதனால்தான் கொலை செய்யலாகாதென்பது. இயற்கை மரணமடைந்த சவத்தைத் தின்பதால் தமோகுணமுண்டாகுமே யன்றி கொலை பாதகம் உண்டாகாது.

இனி ஆன்மசொரூபம் எங்கும் நிறைந்திருப்பினும் அதன் நிலைமையில் மாறுபாடுண்டு. கல் மண் முதலியவற்றில் ஆன்மா துரிய நிலையிலிருக்கிறது. அறிவு விளக்கம் சற்றும் இல்லை. மரம் செடி முதலிய தாவர வர்க்கங்களுக்கு ஸ்பரிஸ உணர்ச்சியாகிய ஒரு அறிவுமட்டுமே யுண்டு. அவற்றின் இலை மலர் காய் கனியாதிகளைப் பறிப்பதால் அவற்றுக்கு உணர்ச்சி தோன்றாது. நமது தேகத்திலுள்ள உரோமம், நகம் முதலியவற்றைக் கழித்தால் நமக்கு எப்படி உணர்ச்சிதோன்றுவதில்லையோ அப்படியே.

அதோடு மனிதன் ஒரு மரத்தை வெட்டிவிட்டால் அது மறுபடி துளிர்த்து உஜ்ஜீவிக்கும். அத்தகையவை யனேகமுள. மேலும் மனிதனும் அவற்றை யுற்பத்தி செய்யக்கூடும். ஆதலின் அவற்றை யுண்பதால் பாபமில்லை. ஒரு ஜீவன் இம்சைப்படும்படி செய்வதே பாபம் என்பதுதான் இதன் முக்கிய நோக்கம்.

குறைந்த அறிவுள்ளவைகளைக் கொன்றால் பாபமில்லையெனில் குழந்தையைக் கொன்றால் பாபமில்லையேயென்று நமது நண்பர் கேட்பது பாபமே. பகுத்தறிவில்லாததாலேயே ஆன்மா இல்லையென்று கருதுவது ஆன்ம லக்ஷணம் அறியாத் தன்மையேயாகும். பகுத்தறிவு அறிவின்வளர்ச்சியில் ஒருபாகமேயன்றி வேறில்லை. எப்போது இம்சைப்படுகிறதோ அப்போது அதில் ஆன்மா இருக்கவேயிருக்கிறது. நித்திரையில்கூட பகுத்தறிவில்லை. அப்படியானல் தூங்குகிறவர்களைக் கொன்றால் பாபமில்லை என்பதோ? அதுதான் பெரும் பாதகம் என்று கூறப்பட்டிருக்கிறது. பெரிய ஜீவன்களெல்லாம் சிறு ஜீவன்களை யுண்டே ஜீவிக்கின்றனவென்று கருதலாகாது. அனேக ஜீவன்கள் கந்த மூலாதிகளையே யுண்டு ஜீவிப்பது பிரத்தியட்ச அநுபவம்.

2. பசுவின்பாலை யருந்துவதாலேயே அதைக் கொன்றால் பாபமில்லையென்று கூறுவது விஷயமறியாத தன்மையாகும்.

இரத்தமே பாலாக மாறுகிற தன்மையே. தாயின் பாலை யருந்தினேம். தாயைக்கொன்றால் பாதகமில்லையே? என்ன அறியாமையிது! பாலைக்குடிப்பவனே ரத்தத்தைக் குடிப்பானே இல்லை. ஏன்? இரத்தமே பாலாக மாறினும் இரண்டின் குணங்களிலும் நேர்மாறான வித்தியாசமிருக்கிறது. அரவின்விடம் கொடிது. வெறுக்கத்தக்கது. அது முதிர்ந்து மாணிக்கமாயின் எவ்வளவு கௌரவமும் முடிமன்னரின் கிரீடத்தில் ஏறும் யோக்கியதையும் பெறுகிறது. ஒரு துளி மழைநீர் பயனற்றது. அது இப்பியின் வயிற்றில் சேர்ந்து முத்தாய் மாறியபோது மிக மதிப்புள்ளதாய் விடுகிறது. அவ்வாறே இரத்தம் அசுத்த பதார்த்தமே. ஆனல் அது பாலாக மாறியபிறகு அமிர்தமாகிறது. மிக்கயோக்கியதையும் மதிப்புமுடையதாய் விடுகிறது. மகா உத்தமமும் பரிசுத்தமுமான உண்பொருளாய் மாறிவிடுகிறது. பசுவின் பாலையருந்துவதிலும், கன்றுக்குப் பால் போதுமானவரை விடாமல் கறந்துகொண்டால் பாதகமேயாகும்.

3. மனச் சிந்தனைப்படியே கர்மம் ஏற்படுகிறது. ஆதலின் மனமறிந்து செய்வதே பாபம். நடக்கும்போதும், சலமருந்தும்போதும் கண்ணுக்குத் தெரியாத அனேகம் உயிர்களைக் கொன்று விடுகிறோமென்ற உத்தேசத்தால் எதைக் கொன்றாலும் பாபமில்லை எனக் கருதுவது வீண் குதர்க்கவாதமேயன்றி வேறில்லை. அறிந்துமனம் சம்மதித்துச்செய்யும் கொலையே (அது புழுவாகட்டும் எறும்பாகட்டும்) பாபமாகும்.

4. முற்காலத்தில் யாகத்தில் மிருகபலி கூறப்பட்டிருந்தது உண்மையே. அக்காலத்தில் யாகம் செய்வோர்க்கு அம்மிருகத்தின ஆன்மா வேதனையின்றி மேலான பதவியை யடையும்படிச் செய்யும் வல்லமையிருந்தது. அது முன் யுகத்தைப் பொருத்தது. இக் கலியுகத்தைச் சேர்ந்ததல்ல. அதோடுபோக இச்சை யுடையோரே அதைச் செய்வது. ஞான காண்டத்தில் யாகபலிகூட நிஷேதிக்கப்பட்டேயிருக்கிறது.

5. ஆஸ்திகமத மனைத்துமே ஜீவ இம்சையை நிஷேதித்துக் கூறுகின்றன. அவற்றில் நமது மதத்திலும், புத்த சமணமதங்களிலும் அது மிக்க அதிகமாய்க் கண்டிக்கப்பட்டிருக்கிறது. சைவமதத்திற்குக் கொல்லாமையே அடிப்படை. அதனுல்தான் சாதாரணமாய் மாமிசம் முதலியவற்றைப் புசியாத ஒருவனை "அவன் சைவமாய்விட்டான்" என்று கூறுவது உலக வழக்கமாய்விட்டது.

சில மதஸ்தாபனர்கள் அவ்வக்காலத்திற்கும் இடத்திற்கும் தக்கவாறு ஜீவ இம்சையாகாதென்பதை ஒருவித வரையறுப்போடும் கூறியிருக்கிறார்கள். ஏனெனில் மாமிச மச்சாதிகளை ஆதிமுதல் சதா உண்டுக்கொண்டிருப்போரை

யடியோடு அதை விட்டுவிடச்சொன்னால் அது ஆகாத காரியமாவதோடு, மதாசாரியர் கூறும் மற்ற போதனைகளையும் அவர்கள் அடியோடு நிராகரித்துவிட்டு நல்வழியிற் திரும்பாமல் அழிந்து போவார்கள் என்பதனாலேயே. காலை முதல் மாலைவரைச் சாராயங் குடித்துக்கொண்டிருப்பவனுக்கு "நீ போஜனம் அருந்தும் போதாவது குடி" என்று முதலில் புத்தி கூறுவதுபோல் கூறினார்கள்.

நாயனார் "கொல்லாமையைப்பற்றி கூறியது துறவறத்தார்க்கு மட்டுமன்று. துறவறத்தார்க்கு அது சற்றும் பொருந்தாததாதலின் அதை அருளுடைமையின் பின்வைத்துக் கூறினாரன்றி வேறில்லை அது பொது விதியேயாகும். அப்படிக் கருதினால், இன்னாசெய்யாமை—வெகுளாமை—கள்ளாமை யாவுமே துறவறத்தார்க்கு மட்டும் கூறினாரென்று கருதலாமோ? அது பொருந்தாது. இவை யாவும் எல்லார்க்கும் பொதுவாகக் கூறப்பட்டவையே.

6. மாமிச மருந்தாததனால் மட்டுமே ஒருவன் சைவனாகி விடமாட்டான். குழந்தைப் பருவத்திலிருந்து அப்பழக்கமில்லாமலிருந்தால் யாரும் அப்படி நடந்துகொள்ளலாகும்.

எவன் தன்னுயிரைப்போல் மன்னுயிரினத்தையும் கருதும் சிவகாருண்யமும், பரமசிவனிடத்தும், சிவனடியாரிடத்திலும் பூரண பக்தியும் உடையவனாயிருக்கிறானோ அவன்றான் சைவன். "சிவனடியாரைச் சிவனெனவே நினைப்பவன் எவன் அவன் சிவனே" என்றனர் ஆன்றோர். இன்னும் யாவற்றையும் சாக்ஷாத் பரசிவ சொரூபமாகவே காண்பவன் எவனோ அவனே சரியான சைவனெனத் தக்கவன். ஆதலின் ஒரு ஜீவனுக்கு இம்சை யுண்டாகும்படிச் செய்வதே பாதகச்செயல் என்றும் அது தாம் படைத்த எல்லாச் ஜீவர்களிடத்தும் கருணை நிறைந்தவராகிய பகவானுக்குச்சற்றும் ஒவ்வாத காரியமென்றும் நாம் கருதவேண்டும்.

ஆன்றோரும் சாத்திரங்களும் கூறியுள்ளவற்றையே நாம் கூறினோமன்றி நாமே யொன்றுங் கூறவில்லை.

——— o) ———

சிலாசாஸனம்.

(சு. பார்வதி ஆதித்த நாடார், காயாமொழி.)

1918-ம் ஆண்டு ஆனிமீ 22உ சோமவாரமும் அஸ்த நட்சத்திரமும் கூடின சுபயோக சுபதினத்தில் குடநாடு திருச்செந்தூர் ஸ்ரீ புவனமகாதேவி சதுர்வேத மங்கலத்தில் நாயனாரினைய நயினார் கோயில் சொர்ண நிலபத்தில் இதற்குமுன் ஆதிச்ச நாடாக்களால் ஓலைப் பரையாக கட்டப்பட்டிருந்த கொட்டகைக்கு எல்லையாவது; முன் ஆதிச்ச நாடாக்களால் கட்டப்பட்டிருக்கிற கல்மண்டபத்துக்குக் கிழக்கு வடஎல்லை, திருமலையப்பப் பிள்ளை மண்டபத்துக்குத் தெம்பி செட்டி சுப்புராய செட்டியால் ஞானசிகாமணி முதலியாரவர்கள் முன்னோர்களுக்குக் கிரயமாகி ஞானசிகாமணி முதலியாரால் கார்த்திகை முத்தையனுக்கு கிரயமாகி மேற்படி கார்த்திகை முத்தையனால் காயாமொழி தையல்பா ஆதிச்ச நாடான் மகன் ராமலிங்க ஆதிச்ச நாடான் கிரயம் வாங்கிய மனைக்கும் செல்லுணர்த்துகிற இடத்தை கிரயத்துக்கு வாங்கி வெங்கு முதலியாரால் கட்டப்பட்ட மண்டபத்துக்கும் தெற்கு. கீழ் எல்லை, வாசமுத்துச்செட்டி குறட்டுக்கும் ரதவீதிக்கும் மேற்கு. தென் எல்லை, விசையராகவ முதலியார் சத்திரத்துக்கும் ஆதிச்ச நாடாக்கள் தண்ணீர்ப்பந்தல் மண்டபத்துக்கும் குமாருப்பிள்ளை சுவாமி யெழுந்தருளப் பண்ணுகிற மண்டபத்துக்கும் வடக்கு. இந்நான்கு எல்லைக்குள் உட்பட்ட மண்டபத்தை முன்னக்குமாரசாமிபா பிள்ளை, தாசில், காயாமொழியி லிருக்கும் தையல்பாக ஆதிச்சநாடான் மகன் ராமலிங்க ஆதிச்சநாடானால் ரூபாய் எழாயிரம் போடப்பட்டும் நாட்டில் ரூபாய் எண்ணாயிரம் வசூல் செய்யப்பட்டும் ரூபாய் பதினையாயிரம் செலவுசெய்து மண்டபம் கட்டப்பட்டும் முகப்புக்கோட்டை

வெங்குமுதலியாரால் தகனுல் நெறித்து அதற்காக சின்னுசாரி, ராமலிங்காசாரி இவர்களால் தூண் ஒன்றுக்கு ரூபாய் இருநூறு பேசி நாலு தூணுக்கு ரூபாய் எண்ணூறுக்கு ரூபாய் ஐனூறு அட்வான்ஸ் கொடுத்து மலைப்பிளவையாக அடித்து மலையில் வைக்கப்பட்டும் குத்துக்கல் நட்டப்பட்டும் இருக்கிறது. இதுக்கு வகை விபரக்கணக்கு சொக்கலிங்கம் பிள்ளை தகப்பனர் வீரபத்திர பிள்ளையால் எழுதப்பட்டும் ஷை கணக்குகளுக்கு அவர் மகனுல் நகல் எழுதப்பட்டுமிருக்கிறது. அந்தக்கணக்கில் தாசில், முத்துக்குமாருசாமியா பிள்ளை கையெழுத்து வைக்கப்பட்டு அதிலுள்ள வாடகை மகமைகள் நாடாக்களால் வாங்கப்பட்டும் தர்மம் செய்யப்பட்டும் வருகிறது.

முத்துகுமாரசுவாமியா பிள்ளை, தாசில்.

(தொண்ணூறு வருடங்களுக்கு முற்பட்ட சாஸனம். நடைமுதல் கொல்லம் ஆண்டு 1100.)

புருஷோத்தமன்

அல்லது

யாதவ அலறில்.

(ஆதித்தன், அ. குமாரகுருபரன்.)

(ஆங்கிலக்கவி; 'ஷேக்ஸ்பியர்' இயற்றிய 'மாரிசாலக்கதை' தமிழ் மேடைக் கேற்பப் பல மாறுதல்களுடனு முதாரணங்களுடனும் கூடியது.)

கடலை மேகலையாக வுடுத்த இப்பூமண்டலத்தில் கண்ணே பற்பல அரசர்களாலாண்டு வரப்படும் பற்பல தேயங்களுள் தர்மாபுரி என்பதும் ஒன்று. இன்னகரை செங்கோல் செலுத்தி வருபவன் புருஷோத்தமனாகும். நன்னூல் என்னும் பெயரே அந்நூலின் பெருமையை விளக்குதல்போல, அன்னகரின் பெயரும் அதைப் பாலிக்குமரசன் பெயருமே அன்னகரச் சிறப்பை நன்கு கூறும். தருமாபுரி கடற்கரையை யணுகிய ஓர் பட்டினம். பெரிய மாடமாளிகைகள், கோபுரங்கள், பெரிய ரதவீதிகள், கல்விச்சாலைகள், ஆலயங்கள் மனோரம்மியமான உத்யாவனங்கள் நிரம்பிய பட்டணம்.

காலை9மணியிருக்கும் அரண்மனையில் மந்திரிகளெல்லாம் கிரமமாக நிற்கின்றனர். அரசன் மெதுவாகத் தலைகுனிந்து வந்து தனது ஆஸ்தானபீடத் தமர்ந்தான். மந்திரிமார் மஹாராஜ் நமஸ்காரம் என வந்தனந் தந்தனர். அரசனே ஒன்றும் பேசாது மௌனமாக இருந்தார். யாவரும் சிறிதுகாலம் பேசாதிருந்தனர். அப்போது முதல்மந்திரியும் அதிக மதியூகியுமாகிய மார்த்தாண்டர் நின்று:—

மார்த்தாண்டர்:—அரசே! இராஜ்யபாரத்தை மேற்கொண்ட நாள்முதல் இதுவரை வதனம் ஒருநாளும் வாடாத தாங்கள், இன்று மனவாட்ட முற்றிருப்பதின் காரண மென்ன? கவலை என்பது மனிதருக்கு அகத்துண்டாகும் ஓர் நோயாகும். இந்த நோயானது தேகத்திலுண்டாகும் நோயைவிட மிகக் கொடியதும், உயிரையே விழுங்கக் கூடியதுமானது. இந்த நோய் சஞ்சிவிமருந்துகள், பஸ்பங்கள், திராவங்கள் லேகியங்களால் தீர்வதல்ல. இதைத் தீர்ப்பதற்குண்டாகிய மருந்தென்னவெனின், உமது ஆப்த நண்பர்களிடம் இக்கவலையைக் கூறி அவர்களையும் இதில் பங்குபெறச் செய்வதே. இதனாலேயே அக்கவலை குறையும். அல்லது நண்பர்களின் பலவித சூழ்ச்சிகளால் கவலை நீங்கும். என்றனர்.

2-ம் மந்திரி கார்த்திகேயர்:— மன்னர் ஏறே! தாங்கள் கவலை கொண்டதின் காரணந் தெரிகிலேன். ராஜீயவிஷயமான கவலையோ, அல்லது குடும்பவிஷயமான கவலையோ, அதுவுமில்லையாயின் தன்னைப்பற்றிய கவலையோ ஒன்று மறிகிலோம். எவ்விதக் கவலையாயிருப்பின் என்ன! அரசனுக்கு மந்திரிமார் வலது

காம் போன்றவர்களே. இனிவரும் பொருளை நன்காராய்ந்து சொல்லவேண்டியது மந்திரியாகிய நாங்களே. எங்களின் யோசனையின்றி, அரசராகிய தாங்கள் ஜனங்களின் திருப்தியை காணமுடியாது. யுத்தமோ, சமாதானமோ யாவும் எங்களால் நடக்கவேண்டியவையே. அழிக்கவும ஆக்கவும் வல்லவர் நாங்களே ஆனபடியின் தங்களுக்குற்ற கவலையைத் தெரிவிப்பிராயின் அதை நிவிர்த்திக்க வேண்டிய வழிகள் தேடுவோம்.

(இவ்விதமாக ஒவ்வொரு மந்திரியும் தத்தந் திறனுக்குத் தக்க பேசினர். இறுதியில்,)

அரசன்:—அமைச்சர்காள்! "குடித்தழீஇ அலம்வீழ்து போலமைச்சும்" என்று பெரியோர் கூறியபிரகாரம், நீங்கள் யாவரும் சதா என்பெருமையை தேடும் நோக்கமுள்ளவர்களா யிருக்கிறபடியால் நான் கொண்ட கவலையைத் தங்களிடம் அறிவிக்கிறேன். ஆனால் இந்தவிஷயம் அந்தரங்கமாக இருக்கவேண்டும். அரண்மனைக்கு வெளியாயுள்ள எவர்க்காதிற்கும் தெரியலாகாது.

விஷயமாவது, நேற்று இரவு களபக்கஸ்தூரியணிந்து உயர்ந்தரத்தின பீதாம்பரங்களுடுத்தி இராணியுடன் படுக்கையில் தாம்பூலாதிகள் மென்று சம்போகஞ் செய்து தூங்கிவிட்ட சமயம் ஓர் கனாக்கண்டேன். அஃதாவது நெடுங்காலத்திற்குமுன் என்னைப் பிரிந்தவன் ஒருவன் வந்ததாகவும் என்னுடன் நண்பனாக யிருந்து பின்பு என்னைப் பிரிந்து பகைவனுடன் ஓடிப்போனதாகவும், அவனால் நமதிளவரசன் கஷ்டத்துக்குள்ளானதாகவும் என் குடும்பமே சீர்கெட்டலைந்ததாகவும் பின்னர் நெடுங்காலத்திற்குப் பின் அவனில் நடப்பட்ட ஓர் சிறு கன்று எனக்குப் பலன்கொடுத்ததாகவும் கண்டேன். இதை நினைக்க நினைக்க என்மனம் பதறுகிறது. இயமன் ஒருவேளை என்னைப் பிரித்து விடுகிறானோ என்கிற பயமுண்டாகிறது. இராஜ்யம் பகைவர் கைக்குட் பிரவேசித்திடுமோ எனச் சிலநேர மென்மனதி லுதிக்கின்றது. நான் பலவாறுகூறி என்ன பண்ண! மந்திரிகளாகிய நீங்களே யாவும் யோசித்துக் கூறுங்கள் பார்க்கலாம். "மந்திரிக் கழகு வரும் பொருளுரைத்தல்" என்று பெரியோர் கூறியிருக்கிறார். அதிலும் நமது மந்திரியாகிய மார்த்தாண்டருக்கு நிகரானவர் யாவருமிலரென எத்தேசத்து மன்னரும் அவரை விரும்புகின்றனர். இத்தகைய மதியாளரான மார்த்தாண்டருக் கெட்டாத விஷய மெதுவிருக்கின்றது. சரி அமைச்சர்காள் இதன் பலனைக் கூறுங்கள் பார்க்கலாம்.

மந்திரிகள் பற்பலவாறு கூறினர். சிலர் இதுகாறும் அடங்காதிருந்த பக்கத்தரசர் அடங்குவார்களென்றும், சிலர் நூதன பெரிய அரண்மனை கட்டும்படி நேரிடுமென்றும் கூறினர். மார்த்தாண்டர் அக் கனவிற்கு ஒரு வாரம் சென்றபின்னரே ஏதேனும் அயல் நிலைமையறிந்து கூறமுடியும். ஆயினும் பகைவர் நம்மையடக்குவர் என்பது சாத்தியமல்ல. நமது ரதகஜ துரகங்கள் ஒவ்வொன்றும் நெடுநாள் போரில்லாததால் திமிறித்திரிகின்றன. எனச் சில மொழிந்தார். யாவரும் ஓர் வித யோசனை முகத்துட னிருந்தனர். சபை கலைந்தது. அரசனும் பெருமூச் செறிந்து வெளியே சென்றான்.

இரண்டாம் காட்சி.

மறுநாளும் சபை கூடித் தேச நிலைமையைப் பற்றியாலோசித்துக் கொண்டிருக்கையில் அரசன் வந்தான். முந்தியநாள் கனவின் பலனை யாவரேனும் கூறமுடியுமோ? என அரசன் வினவ யாவரும் கற்றூண்போல மௌனஞ் சாதித்தனர். அரசன் தேசத்தின் மழை, ஆலயபூஜை, சத்திரங்களின் தர்மம், கல்விச்சாலை, முதலியவைகளின் ஒழுங்கை விசாரித்து முடித்தான். அப்போது எக்காள சப்தம் கேட்டது. பேரிகைகள், முரசங்கள் முழக்கம் காதிற்கு எட்டின. ஏறக்குறைய இச்சப்தம் இரண்டு மைல் தூரத்திலிருந்து கேட்டன. யாவர் மனதிலும் ஓர் திகிலுண்டாயிற்று. அரசன் யாது செய்வதென்று தோன்றாது பிரமித்திருக்கின்றான். இச் சமயம் மார்த்தாண்டர் தனது அருகாமையாக நின்ற காவலர் குழாத்தார் இரு

வரையழைத்து, நீங்கள் சென்று விஷயமறிந்து ஓடிவாருங்களென ஆக்ஞாபித்தார். யுத்தவீரர்களாகிய அவ்விருவரும் காற்றிலும் வேகமாகச் செல்லக்கூடிய இரு குதிரையில் ஏறிச்சென்று ஐந்தே நிமிஷத்தில் திரும்பி வந்தனர். மந்திரிமார் "என்ன, என்ன' வென்று ஆத்திரத்துடன் வினவினர். அப்போது தூதர்கள் சபையைப் பார்த்து மஹாராஜனுடைய திருமுக தரிசனம் பெறுவதற்காக, சந்திரபுரியை அரசாளும் சந்திரசேகர மஹாராஜன் வருகிறார்" என்றனர். புருஷோத்தமன் திடீரென தனது சிம்ஹாஸனத்தை விட்டெழுந்தான். "நமது ரதங்களையும் மேளதாளங்களையும் கூப்பிடுங்கள். எதிர்கொண்டழைப்போம்" எனப் பரபரப்புடன கூறினான். ஆனந்தக்கடலில் மூழ்கினான் நெஞ்சு ஓய்வின்றாகத் துடிக்கிறது. ஒன்று சொல்வதற்கு நாவெழுகிறதில்லை. சீக்கிரம், சீக்கிரமென்று அதிகப் பிரீதிப் பல்வித எக்காளங்களுடன் ரதமேறி எதிர் கொண்டான். இரு ரதங்களும் ஒன்றையொன்று நெருங்கு முன்னரே புருஷோத்தமன் தன் ரதத்தினின்றெழுந்து நின்றனர். நெருங்கியதும் சந்திர சேகரனுடைய ரதத்தில் குதித்து அவனை ஆலிங்கனஞ் செய்து கண்ணீராக ஆர்த்தான். பேசுவதற்கு நாவெழுகிறதில்லை. முதலாவதாக 'சந்திரசேகரா' என்றான். இதற்குள் நாகுழறிற்று கண்ணீர் விட்டான். பின்னர் சந்திரசேகரன்! என்ன புருஷோத்தமா உட்கார் என்றான். இருவரும் அந்த ரதத்தே இருசுடராக விளங்கினர். ரதமும் அரண்மனையை நோக்கிற்று. புருஷோத்தமன் ரதத்திலிருக்கும்வரை பேச நாவெழவில்லை. இருவரும் அரண்மனை கோட்டைக்குள் வந்ததும் பேச ஆரம்பித்தான். தாய் தந்தையர் க்ஷேமம், தேசநிலைமை யாவற்றையும் பேசினர். இருவரும் கண்ணிற்குக் கண்ணான நண்பராகப் பாடசாலையிலிருந்து, பின்னர் 15-வருடம் பிரிந்து ஒருவர் மகுடாபிஷேகத்திற்கு ஒருவராவது, ஒருவர் விவாஹத்திற்கு மற்றவராவது செல்லாதிருந்து இப்போதுதான் முதலாவதாகச் சேர்ந்தனராயின் சொல்வானேன். [illegible] பிரிவின் பலனை [illegible] யாதவர் யாவரும் அவ்விருவர் நிலைமையைப் பார்த்துப் பிரமித்தனர். புருஷோத்தமன் அரமனைக்குள் போய் ஆகாரவசதிகள் தயார் செய்வதற்குத் தனது நாயகியாகிய ரங்கநாயகியிடம் கூறினதுமன்றி, தன்னைவிட அதிதியையே நன்குபசரிக்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறுவான். உடனே தோழனிடம் வந்து நிற்பான். மறுபடி உள்ளே போவான் நேயனிடம் வந்து நிற்பான் இவ்விதமாக அரைமணி நேரத்திற்குள் 25 தரம் போய்வந்திருப்பான். சிறிது காலத்திற்கெல்லாம் யாவருக்கும் போஜனமளிக்கப்பட்டது. புருஷோத்தமன் தனது நேயனை நெடுங்காலம் அரண்மனையிற் தாமதிக்கச் செய்யவேண்டுமென்று, அவனது பணியாளர்கட்கு தங்கநாணயங்கள் இனமளித்து அனுப்பினான். அவர்களும் சந்திரசேகரனிடமுத்தரவு பெற்றுத் திரும்பினர்.

புருஷோத்தமன் பின்னர் தன் மந்திரிமார்கட்குச் சந்திரசேகரனுந் தானும் பெருந்தோழராகவிருந்ததையும் விவாஹம், மகுடாபிஷேகம் முதலியவற்றிலும் ஒருவரையொருவர் சந்திக்க நேரிடாததையும் மனவேக்கத் தொனியுடன் கூறினான். மந்திரிகளும் சிறிது நேரம் பேசிப் பின்னர் சென்றனர். சிலநாட்கள் கழிந்தன.

சந்திரசேகரனுக்கு தனது முதன் மந்திரியிடமிருந்து நிருபம் வந்தது. அதை வாசித்ததும் சந்திரசேகரன் தன்னகர் செல்ல உத்தேசித்தான். நேயன் தன்னிடம் வந்ததும் கடிதத்தைக் காட்டித் தன்னை யனுப்பும்படியாகக் கேட்டான். புருஷோத்தமனோ நண்பனை அனுப்புவன்! அவனை ஆயுள்பரியந்தம் ஆதரிக்க வேணுமாயினும் சம்மதமே. அவனே தங்கியிருக்க வேண்டும். ஆனால் சந்திரசேகரனோ ஓயாது தான் செல்லவேணுமென்று மன்றாடுகின்றான் புருஷோத்தமன் தர்மசங்கடத்தில் விழுந்தான். நேயனை அனுப்பவும் பிரியமில்லை. மேலும் மேலும் மன்றாடும்போது தடுத்துரைக்கவும் நாவெழுகிறதில்லை. உம்,உம், எனப் பேசாதிருக்கின்றான். இதோ வருகின்றேனென்று உள்ளே போய் ரங்கநாயகி

யைக் கண்டான். 'பெண்ணே' சந்திரசேகரன், எத்தனையோ வருடங்கட்குப்பின் இப்போது வந்தனன். இன்று போகவேண்டுமென்று சொல்கிறான். நான் பன்முறை தடுத்தேன் பிரயோஜனப்பட்டிலது, எனக்காக நீ சொல்லிப் பார். உன்வார்த்தைக்காவது இணங்குவானா பார்ப்போமென்றான். ரங்கநாயகியும் நாதா! அப்படியே செய்கிறேனென்றாள். இரண்டுமணி நேரங்கழித்து நேயரிருவரும் சாப்பிட உட்கார்ந்தனர். புருஷோத்தமன் சீக்கிரம் தனது ஆகாரத்தை முடித்து வெளியே வந்துவிட்டான், சந்திரசேகரனும் பின், தன் ஆகாரத்தை முடித்து, ரங்கநாயகியிடம் சோதரி, நான் ஊர் சென்று வரலாமென நினைக்கிறேன் உன்னிடம் உத்தரவு பெற்றாயிற்று. உன் உத்தரவை எதிர்பார்க்கிறேனென, ரங்கநாயகி யிடியோசைகேட்ட சர்ப்பம்போல் 'பதைத்து' என்னசெய்தீர்கள், ஊருக்கா, நான் ஒன்றும் சொல்லமுடியாது. நீங்கள் இன்னும் பத்து நாட்களாவது தங்கிப் போகவேண்டும் என்றனள்.

சந்தி:—அக்கா! ராஜீயவிஷய மெவ்வாறிருக்குமோ. மந்திரி கடிதமெழுதியிருக்கிறார். என்னை வற்புறுத்தவேண்டாம்.

ரங்க:—அரச. மந்திரிகளே தேசத்தையாளுபவர். ராஜனல்ல. தாங்கள் சௌகரியமாக இருங்கள். பெண்ணான எனது வார்த்தைக்குச்சிறிது செவிசாய்த்து, தங்களின் தோழனை அகமகிழச் செய்யுங்கள்.

சந்தி:—அக்கா. நான்போய்த் திரும்பிவருகிறேன் சிறிது காலத்தில்.

ரங்க:—அரச. என்னை வருந்தச்செய்யவேண்டாம். தாங்கள் போகவேகூடாது. பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்று பெரியோர் கூறியிருக்கின்றனர்.

(தொடரும்.)

—(o)—

குறுநில மன்னர் குலம்.

(11-6-1924-ல் சேலம் க்ஷத்திரியனில் வெளியானது.)

இதுவரை தொல்காப்பியமென்னும் புராதன இலக்கண நூலைக்கொண்டு குறுநில வேந்தர் குலம் மன்னர் குலமாகிய இரண்டாவது குலமே யெனவும் அவர்களை வேடரென்று சொல்லிய கூற்று வெறுங்கூற்றே யெனவும் சித்தாந்தம் செய்தோம். இனி திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தில் அவர்களைப்பற்றிய குறிப்புகளையும் சரிதங்களையும் ஆராய்வோம்.

திருமுறை கண்ட புராணம்.

திருமறையோர் புராணமவை பதின்மூன்று
சிவவேதியாரை வழிபட்டபுராணமீரிரண்டு
குலைசழன்மா மாத்திர ரொன்றறுவர் முடிமன்
னர்குறுநிலமன்னவரைவர்வணிகர்குலத்தலைவர்
இருமைநெறி வேளாளர் பதின் மூவரிடைய
ரிருவர் சாலியர் குயவர் தயிலவினையாளர்
பரதவர் சான்றார் வண்ணார் சிலைமறவர் நீசர்
பாணரிவரோ ரொருவராம் பகருங்காலே.

உமாபதி சிவாச்சாரியார் மேற்படி கவியில் சேக்கிழார் திருத்தொண்டர் ஜாதிகளைப்பிரித்த வகையைக் கூறுகின்றார். அக்கவியின்படி

திருமறையோர்	...	13
சிவவேதியர்	...	4
மாமாத்தியர்	...	1
முடிமன்னர்	...	6
குறுநிலமன்னர்	...	5
வணிகர்	...	5
வேளாளர்	...	13
இடையர்	...	2
சாலியர்	...	1
குயவர்	...	1
செக்கார்	...	1
பரதவர்	...	1
சான்றார்	...	1

வண்ணார்	...	1
வேடர்	...	1
நீசர்	...	1
பாணர்	...	1

மேற்படி பாடலில் ஜாதிகளை வரிசையாகவும் வர்க்கமாகவும் உமாபதியார் பிரித்திருப்பதை யும் உணரவேண்டும்.

திருமறையோர், சிவ மறையோர், மாமாத்திரர் } பிரம்ம வர்க்கம்

முடிமன்னர், குறுநிலமன்னர் } க்ஷத்ரிய வர்க்கம்

அதன்பின் அடுத்தபடியாக வணிகர்களையும் அதன்பின் வேளாளர்களையும் ஆக உயர் ஜாதி கள் நான்கையும் குறிப்பிட்டுவிட்டு கலப்பு ஜாதிகளைப் பிறகு குறிப்பிடுகின்றார். மேல் சொல்லிய வர்க்க வகையில் பிரம்ம வர்க்கத் தில் மூன்று ஜாதிகள் சொல்லப்பட்டிருக்கின் றன. அவைகள் தங்களுக்குள் பிறப்பால்உயர்வு தாழ்வுள்ளவைகளா யிருக்கலாம். ஆனால் க்ஷத் ரிய வர்க்கத்தில் சொல்லப்பட்ட இரண்டும் பிறப்பாலன்றி நிலையால் உயர்வு தாழ்வுடை யனவென்பதற்கே இந்த எமது ஆராய்ச்சியாத லால் அதையே இனி நிரூபிப்போம். நமது கிராமணியின் கூற்றுப்படி பெரிய புராணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட குறுநில மன்னர் ஐவர் களும் வேடராகின்றனர். அப்படியாயின் வே டர் ஜாதியிற் பிறந்த கண்ணப்பநாயனார் சரித் திரத்தைப் பின்னால் 'சிலைமறவர்' என்று உமா பதியார் வேறு பிரித்திருக்கக் காரணமில்லை. ஆதலால் உமாபதியார் அபிப்பிராயப்படி ஐவர் குறுநில மன்னர்களும் சிலை மறவரும் வெவ் வேறு வகுப்பினர் என்றேற்படுகின்றது. ஐவர் குறுநில மன்னரில் இருவர் பல்லவர்களாகிய வேற்றுப் புலத்தவர்கள், மூவர் தமிழ்நாட்டரசர் கள். அவ் ஐவராவார்—

ஐயடிகள் காடவர்கோன்
கழற்சிங்கனார்
மெய்ப்பொருளார்
கூற்றுவனார்
நரசிங்க முனையரையர்

என்பவர்கள். இனி இவ்வைந்து அரசர்களைப் பற்றி பெரிய புராணத்தில் பேசுவதைப் பின் னாலெழுதுவோம். முதலில் பெரிய புராணத் திற்கு முதனூல்களாகிய சுந்தரமூர்த்தி சுவாமி கள் திருத்தொண்டத் தொகையிலும் நம்பி யாண்டார் நம்பிகளின் அந்தாதியிலும் அவர்க ளைப்பற்றிய குறிப்புகளை விளக்குவாம்.

திருத்தொண்டத் தொகை.

'ஐயடிகள்காடவர்கோனடியார்க்குமடியேன்'
'கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான்
காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன்'
'வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியே
'ஆர்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோனடி
[யேன்'
'மெய்யடியனரசிங்கமுனையரையர்க்கடியேன்'

மேற்படி குறிப்புகளில் அவர்கள் வேட ரென்பதற்குச் சிறு ஆதாரமுமில்லை. அடையு மில்லை. ஆனால் 'கடல் சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான், காடவர்கோன், வெல் லுமாமிகவல்ல, வேற்கூற்றன், களந்தைக் கோன்' முதலிய கம்பீர அடைமொழிகளே காணப்படுகின்றன. பெருமான் என்னும் மொ ழி க்ஷத்ரியர்க்குரியதல்லவா? கோன் என்ற குறிப்பு யாருக்குடையது? 'வெல்லுமாமிக வல்ல' என்னும் வெற்றிக்குறிப்பு வேடருக்கா? வேற்படை வேந்தருக்கே யெனவும் மற்றவர்க் கில்லை யெனவும் முந்தி 'வில்லும்' என்னும் தொல்காப்பிய சூத்திரத்திலும், 'அன்னராயி னும்' என்னும் அடுத்த சூத்திரத்திலும் சொல் லப்பட்டிருப்பதைக் காட்டினோம். ஆதலால் சுந்தரமூர்த்திகளின் அபிப்பிராயப்படி இவர் கள் ஐவரும் அரசவகுப்பே யென்பது பெறப்படுகின்றது என்றனர்.

எமது சமாதானம்.

இவ்வியாசத்தை அவர் எழுதியது குறுநில மன்னரை உமாபதி சிவாச்சாரியார் அரசருக் குக்கீழ் எழுதியிருத்தலின் அவர்கள் அரசமர பினரே யாவரென்பதையும்; வேடரை அவ் வுமாபதி சிவாச்சாரியாரே குறுநில மன்னரி லிருந்து வேறுபிரித்து வண்ணாருக்குக் கீழ்

அமைத்திருத்தலின் வேடர் வேறு, குறுநில மன்னர் வேறு என்பதையும் விளக்குதற்கேயாம். இதற்குத்தகுந்த சமாதானம் எமது க்ஷத்திரிய மித்திரன், ஆறுவது மலர், முதலாவது இதழிலும், மூன்றாவது இதழிலும், குறும்பர் குல ஆராய்ச்சியின்கீழ் எழுதியுள்ளாம். இங்கும் இரண்டொன்றைக் காட்டிமுடிப்பாம்.

இராஜபுதானத்தில் சோகியும் அரசனாயிருக்கிறானென்பதை James Tod's Rajasthan என்னும் நூலிலும், The Indian Companian or General Statistics of India என்னும் நூலிலுங் காணலாம். அச்சோகியை அரசனென்னும்ஒதாவில், அந்த இராஜஸ்தான் சரித்திரத்திலேயே, அரசரோடு சேர்த்தெண்ணப்பட்டுள்ளது. அப்படி எண்ணியிருத்தலால் அவன் அரசனாவானா? அவனது சோகிவம்ஸத்தையும் அவ்வரச வம்ஸத்தோடு சேர்த்தெழுத முடியுமா? அச்சோகிகளைவேறுபிரித்துத்தானே கூறவேண்டிவரும். அவர்களுக்குத் தக்க இடம் அதுவாகுமா? அரசருக்கும் செட்டிக்கும் மத்தியில் சோகி நிற்பானா? அதைப்போலவே, உமாபதி சிவாச்சாரியாரும் அந்த ஐந்து குறுநில மன்னர்களை அரசரென்னும் ஒதாவில் அரசருக்குக் கிழமைத்தனர். அந்த ஐவர்களன்றி, அவர்கள் வம்ஸத்து கண்ணப்ப நாயனாரையும் அவருக்குத்தக்க இடத்தில அமைக்க நேர்ந்தது. அரசருக்கும் செட்டிக்கும் மத்தியில் குறும்பரை வைத்துப் பார்க்கமுடியுமா? அல்லது குறுநில மன்னருக்குரிய குறும்பர் முதலிய பெயர்கள் அரசரைக் குறிக்குமா? அவற்றில் அரசர் என்னும் பொருளாவது நிற்குமா? அக்குறும்பரின் தன்மையை அவர் கையாண்டுவரும் (Thurston's Castes and Tribes of Southern India, Vol IV, P. 155 to 177.) தென்னிந்தியாவின் சாதிகளும் குலங்களும் என்னும் நூலில் காணலாம். அவர் குறுநிலமன்னர் என்னும் பெயரை மாத்திரம் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு, அவர்களுக்குரிய "குறும்பர், அரட்டர்" முதலிய மற்றப்பெயர்களை கீழே தள்ளிவிடுகிறார். அவைகளையும் ஒன்றுசேர்த்துப் பார்ப்பாராயின் அதனுண்மை அவருக்கு விளங்கும்.

வடஆர்க்காடு ஜில்லாவில் சத்திய விஜயநகரமென்ப தொன்றுண்டு. அது பிராமண அரசரொருவரால் ஆளப்பட்டு வருகிறது. அவரை அட்மினிஸ்ட்ரேஷன் புத்தகத்தில் அரசரோடு சேர்த்தெழுதப்பட்டுள்ளது. அப்படி சேர்த்தெழுதியதால் அவர் அரசராவரா? அவர் வம்ஸத்தை அரசரோடு சேர்த்தெழுத முடியுமா? அவர் பிராமணராயிற்றே! பிராமணரை எழுத வேண்டிய இடம் அதுவாகுமா? அவர் ஒருவர் மாத்திரம் அரசத்தன்மையை பெற்றிருத்தலால் அரசரோடு சேர்த்தெழுத நேர்ந்தது. இவ்வகையே குறுநில மன்னருக்கு மேற்பட்டது. அவர்கள் அரசத்தன்மை பெற்றிருத்தலால் அந்த இடத்தில் நின்றனர். அந்த இடத்திற்கு அவர்கள் வம்ஸத்தவர்கள் சண்டையிட முடியுமா? முடியாதென வறியவும். இம்முறையைக் கொண்டே கண்ணப்ப நாயனாரையும் அவர்களிலிருந்து வேறுபிரித்துக் கூறியதென வறியவும்.

தென்தேசத்திலுள்ள சமீன்தார்களெல்லாம் ஒருவகையினரா? பலவகையினராயிற்றே! அவர்கள் ஜமீன்தார் என்னுமுறையில் ஒரேயிடத்தைப் பெறுவர். சாதியைநோக்க பலயிடமாக வேண்டும். அதைப்போல்தான் குறுநிலமன்னருக்கும், குறும்பருக்கு முள்ள வித்யாசமென வறியவும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில் "ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியேன்" என ஐயடிகள் காடவர்க்கோன் நாயனாரையும், "கடல்சூழ்ந்த வுலகெலாம் காக்கின்ற பெருமான், காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்" என கழற்சிங்க நாயனாரையுங் கூறியுள்ளார். இவற்றில் சுந்தரர் ஐயடிகளையும், கழற்சிங்கரையும் "காடவர்கோன்" என்றனர். "காடவர்கோன்" என்றால் காட்டிலுள்ளவர்களுக்குத் தலைவன் அல்லது அரசன் என்பது பொருள். காடு+அர்=காட

வர் எனப்படும். காட்டிலுள்ளவர் என்பது பொருள். அவர்களது காட்டின் வசிப்பு எவ்வகையிலும் அவர்களை விட்டொழியவில்லை. இவர்கள் காட்டிலுள்ளவர்களுக்குத் தலைமை பூண்டு, அக்காட்டிற்கு அரசனென விளங்கியதால் "கோன்" என்னும் பெயரை, காடவர் என்னும் பெயரோடு சேர்த்து 'காடவர்கோன்' என வழைக்கப்பட்டனர். இம்முறையாலேயே உமாபதி சிவாச்சாரியாரும் அரசரென மதித்து, அரசருக்குக் கிழமைத்தனர். அரசவம்ஸத்தவராயிருந்தால் வேறுபிரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. இவற்றாலும் அவர்கள் காட்டாசரென வெளிப்பட்டனர்.

நம்பியாண்டார் நம்பிகள் அந்தாதியில் "பத்திக்கடலை யடிகளாகின்ற நம்பல்லவனே" என ஐயடிகளை "பல்லவன்" என்கின்றார். பல்லவன் என்றால் கீழ்மக்கள் என்பது பொருள்.

பிங்கல நிகண்டு.

"பல்லவர் கயவர் பதகர் நீசர்,
வெளிற நற்பர் கீழோர் பெயரே"

சூடாமணி நிகண்டு.

"பொறியிலாக் கயவர் நீசர்
புள்ளுவர் புல்லர் தீயோர்
முறையிலார் முசுண்டர் மூர்க்கர்
முசுடர் பல்லவரே கையர்"

சதுரகராதி.

பல்லவர்=கீழ்மக்கள்.

போகராதி.

பல்லவர்=கீழ்மக்கள்.

இராட்லர் தமிழ் இங்கிலீஷ் அகராதி.

பல்லவர்=The same as கீழ்மக்கள். low peoples

வின்ஸ்லோ தமிழ் இங்கிலீஷ் அகராதி.

பல்லவர்=Low persons, the base, கீழ்மக்கள்.

என வாகிய நிகண்டகராதிகளைக் கவனியும். பல்லவர் என்றால் கீழ்மக்கள் என்னும் பொருளைக் கொடுக்கின்றதேயன்றி, மேன்மக்கள் என்னும் பொருளை விளக்கவில்லை. இதனாலும் பல்லவர் என்னுஞ் சாதிப்பெயரையுடைய குறுநிலமன்னர் கீழ்மக்களேயன்றி, அரசராகாரென வறியவும்.

நம்பியாண்டார் நம்பிகள் அந்தாதியில் 'பெற்றவன் சேதிபன் மெய்ப்பொருளா மென்று பேசுவரே" என மெய்ப்பொருளனாரை சேதிபன் என்றார். சேதிநாடு யாருக்குரியது? மேலே யாம் தெரிவித்த "குறும்பர் வன்னியர் என்பதின் வரலாறு" என்னும் வியாசத்தின் கீழ்பாரும். திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், மெய்க்காட்டிட்ட திருவிளையாடல், 2-வது செய்யுளில் "தேங்குபுகழ் வன்னியர்க டலைவனாய சேதியர்கோனென்பானோர் கிராதர்கோமான்" எனவும்; திருவிளையாடற் புராணம், மெய்க்காட்டிட்ட படலம், 4-வது செய்யுளில் "வல்வேடர்க் கதிபதியாய் வருசேதி ராயனென்னும், வில்வேடனொருவனவன் விறல்வலிபான் மேலிட்டு" எனவுங் கூறிய பகுதியை கவனிப்பாராக. அந்த வேடனாகிய சேதியர்கோன் பாம்பரையில் இந்த மெய்ப்பொருளனார் உதித்தமையால் சேதிநாடு இவருக்குரியதாயிற்று. இதனாலும் குறுநில மன்னர் வேடரெனவே யறியலாம்.

திருத்தொண்டைத் தொகையில் கழற்சிங்க நாயனாரை "உலகத்தைக் காக்கின்றவர்" என்றிருப்பதால், அரசரென உயர்ந்தனர். உலகத்தைக் காக்காமல் அரசரென்னும் பெயர் எவ்விதம் கிடைக்கும்? சத்திபவிஜபங்காத்து பிராமணரும் உலகத்தைக் காத்தலாலேயே அரசரென்னும் பெயரைப்பெற்றார். அப்படிக் காக்காவிட்டால் எவ்விதம் பெறுவர்.

"பெருமான் கோன்" என்னும் குறிப்புகள் யாருக்குடையதென்கின்றார். சோகியே அரசனெனக் கூறும்போது வேடர் அரசரெனக் கூறுதற்குக் கேட்பானேன். அப்படி அப்பெயரை வைத்திருந்தலால் அரசவம்ஸத்தவரெனக் கூற முடியாதென வறிவாராக. (பத்திராதிபர்.)

* க்ஷத்திரியன். *
தபால் சார்ஜ் உள்பட இரண்டரை அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஹிந்து தேவஸ்தான பரிபாலன மசோதா.

(ஏ. இராஜநாயகம் நாடார், மாவிடுபண்ணை.)

———(o)———

ஒழுங்குத்தவறாகப் பரிபாலனம் செய்யப்பட்டுவரும் தேவஸ்தானங்களை சீர்திருத்துவதற்காக 1923ஆ ஏப்ரல்மீ கனம் மந்திரியாம் இராமராய நிங்கார்காரு (பனகால் இராஜா) அவர்களால் கொண்டுவரப்பட்ட அம்மசோதா சென்னை மாகாண சட்டசபையின்கண் எவ்வளவோ வாக்குவாதங்கள் ஏற்பட்டாலும், மங்களகரமாய் ஜெயம்பெற்றதென்பதை நேயர்களுக்கு யாம் சொல்லத் தேவையில்லை. பின்னர் அதுகாலையில் மாகாணாதிபதியாக விளங்கிநின்ற லார்ட் உல்லிங்டன் அவர்கள் ஒப்புக்கொண்டு கையெழுத்திடப்பட்டு இராஜப் பிரதிநிதியின் அங்கீகாரத்திற்காகக் காத்துநின்றது. மேன்மைதங்கிய கவர்னர் ஜெனரலுக்கு பலவிதமான ஆட்சேபனை விண்ணப்பங்களும் மகஜர்களும் போய்க்கொண்டிருந்தமையால் அவர்கள் ஏறக்குறைய 20 மாதங்களாக ஆலோசித்து அதன் அவசியத்தை நன்குணர்ந்து 1924ஆ த்திய ஹிந்து தேவஸ்தான பரிபாலன மசோதாவைத் தான் அங்கீகரித்ததற்கான காரணங்களை வெகு தெளிவாக எடுத்தோதி 1925ஆ ஜனவரி 2-ம் தேதியில் தனது அங்கீகாரத்துடன் கெஜட்டில் அறிக்கையிடப்பட்டதைக் கேள்விப்பட்டதும் அகமகிழ்கின்றோம். இதை எதிர்ப்பவர்கள் அநேகமாக தேவஸ்தானங்களை பரிபாலனம் செய்யக்கூடியவர்களின் மாபை பொட்டியவர்களே யென்பதில் ஐயமில்லை. தேசமகாஜனங்கள் தங்கள் பூரண சம்மதத்தை நமாளடுகள் மூலமாகத் தெரிவித்தார்கள். இரண்டொரு சுயநலப் பத்திரிகைகளையன்றி, தேசமக்களுக்குகந்த எல்லாப் பத்திரிகைகளும் இம்மசோதா எவ்வளவு அவசியமென்பதைச் சுட்டிக்காட்டின. ஹிந்து தர்மம் கெட்டுவிடுவதுடன் மனுதர்மசாஸ்திரத்திற்குப் பங்கம் ஏற்பட்டு விட்டதாகவும், நம்மதம் அடியோடு பாழ்பட்டுவிட்டதென விங்ஙனம் பலப்பல பசப்பு வெறுமிதழ்களை நிரைப்பிற்று· ஒழுங்குத்தவறாக ஒரு சாரார் சகல சுதந்தரங்களையும் அநுபவித்துக் கொண்டிருக்க ஏனையோர் அண்ணாந்துபார்த்து வயிறெரிவதுதான் கடமைபோலும். இரவும் பகலும் தேவாமிர்தமுடன் உண்டு கழித்து, பொதுஜன வருவாயைத் தொலைப்பதுதான் நீதியோ? ஒவ்வொரு ஆலயங்களும் கவர்ன்மெண்டாரிடம் பதினாயிரக்கணக்கான ரூபாய்களை வாங்கி அவைகளும் ஒருபகுதியார் மட்டும் யாதொரு கணக்குமின்றி, பொது ஜனங்கள் எண்ணங்களுக்கு விரோதமாகச் செய்வதென்னநீதி? ஒடுக்கப்பட்ட ஜனங்கள் முதல் நாலுஜாதியாரும் இக்கோவிற் பொக்கிஷங்களை நிலைப்பிளிக்க, ஏனோ அவர்கள் பிரதிநிதிகளைக்கொண்டு சபையாக நிர்மாணித்து வரவு செலவு காட்டக்கூடாது? இதைப் பொதுப்பணம் என நினையாது தங்கள் பணம்போல் பாவித்துப் பல நூற்றாண்டுகளாக தின்றலைந்து யிழக்க யாரால் மனம்கூடும்! தக்ஷண நாடார் பேட்டைகளை வயிறாத்தின்ற மகரிஷிகள் தங்கள் சுதந்தரத்தை யிழக்க எங்ஙனம் பின்வாங்குவர்களோ, அதைப் போலன்றோ இவர்கள் செயலுமிருக்கின்றது. எவ்வளவுகாலம் தான் தெய்வம் பொறுத்திருக்கும். ஏழைகள் அழுதகண்ணீர் கூரியவாளை யொக்கும் எனும் பழமொழி எவ்வளவுகாலம் தான் மறைந்துபடும். இன்னம் ஆலயங்களில் ஏற்பட்ட நிர்வாகக் குறைகளை யாம் சொல்ல விரும்பவில்லை. இம்மசோதாவால் ஒழுங்காகப் பரிபாலனம் செய்யப்படாத தேவஸ்தானங்களை ஒழுங்குப் படுத்துவதுடன் நாலு ஜனங்களும் அதன் உரிமையைப் பெற்று மகிழ்ந்து கொண்டாடுவதுடன், வெளிமகளிர் களியாட்டங்கள் முதலிய சில்லரையாட்டங்கள் ஆடாது தடுக்கப்பட்டு சுவாமி கைங்கரியம் செவ்வனே மிக்கக் கிரமமாக நடைபெறுவதுடன், தேவஸ்தானக் கமிட்டிகளுக்கு எல்லாமரபார்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும்

சுதந்தரமும் இன்னமும் சொல்லமுடியாத பல உரிமைகள் நானாசாதியாருக்கும் சீக்கிரம் கிடைக்கும் என்பதை நாம் துணிந்து கூறுவாம்.

இத்தியாதி காரணங்களைக் கவனித்து மேன்மைதங்கிய இராஜப்பிரதிநிதி அவருடைய அங்கீகாரத்தை கொடுத்துவிட்டார். அவர்பால் கடைப்பாடுடையோம். ஆனால் இன்னமும் சட்டசபையோர் விரும்பும் இரண்டொரு சீர்திருத்தங்களைச் செய்து உடனே அமுலுக்கு வரலாமென இடங்கொடுத்துள்ளதை நினைக்குங்காலை சுயநலப்புலிகள் கொஞ்சம் துள்ளக்காரணமுண்டு. ஆனாலும் தேசப்பிரதிநிதிகள் உஜாராக நின்று ஒருமாற்றமும் செய்யாது இதை உடனே அமுலுக்குக் கொண்டுவருமாறு எதிர்பார்க்கிறோம். சுபம்!

———(0)———

நடுநிலைமை.

(பழைசைவாசி.)

சமஸ்தபுவனங்களும் எந்நிலைமையில் மகாஜனங்களுக்கு நியாயங் கொடுக்கிறதோ அந்நிலையே நடுநிலையாகும். இந் நடுநிலைமையைப் பூச்சக்கரத்தை ஓர் சட்டாகக்கொண்டு அது நிலைத்திருப்பதற்கு மத்தியில் நிறுத்திய ஓர் தூணாகவுங் கூறலாம். இந்நடுநிலைமை யுள்ளவர்களே சான்றோர் எனப்படுவர். இதை நிரூபிக்கவே தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார் "சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொரு பாற்கோடாமை சான்றோர்க் கணி" எனக் கூறியிருக்கின்றனர். இதின் கருத்தை யாராயப்புகின் பின்வருமாறு உரைக்கலாம். அதாவது, கோல் என்னப்பட்ட மாந்தர் சமன் எனும் அடையாளமாகிய நடுநிலைமையைக்கொண்டு, ஆராயுமிடங்களின் வாதி பிரதிவாதிகளா லறிவிக்கப்பட்டவற்றை முறையே உணர்ந்து, பாரபக்ஷமின்றி பகைவன், நண்பன், அயலான் என்னும் முத்திறத்தாருக்கும் சமரசமதத்தை அளித்தலாகும். இவ்வண்ணம் ஒழுக்கமுள்ளவனே சான்றோன் என்னப்படுவான். துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனஞ் செய்யும் அவதார புருடர்களின் பெருங்குணம் இதுவேயாகும். மேலும் சாகரஞ்சூழுமிப் பூவுலகை யாண்டுவரு மொவ்வொரு செங்கோல் மன்னனும் கையாண்டு வந்ததும், வருவதும், வரப்போவதும் இந்நடுநிலையே. பெரியோர் இருவகையாவர் (1) தவத்தால் பெரியவர் (2) வலியால் பெரியவர். இவற்றில் முதலாவதாகிய தவத்தில் பெரிய முனிவர்கள் "கன்னலங் கழனிநாடு நன்னகருங் கருதியான் செய்தவம்விட்டு மன்னவனாகவல்லனோ" என்று கௌசிகமுனி கூறியபடி, இவ்வுலகப் போராட்டத்தில் முன்னீர்த்திரைபோ லாடிக்கொண்டிருக்க மனங்கொள்ளார். வலியால் பெரியவராகிய அரசரோ உலகவாழ்விலே ஈடுபட்டு, அசுரத்தனமிலேச்ச மாந்தரைத் தமது செங்கோலாலடக்கி சாதுக்களைக் காப்பாற்றி சத்குருவையடைந்த சந்தேகி உபதேசங்கள் கேட்டுத் தனது இருதயத்தை ஓர் நிலையில் நிறுத்துவதுபோல் உலகத்தில் சமாதானத்தை நிறப்புகிறான். மனுநீதி சோழன், பொற்கைப் பாண்டியன் முதலிய மன்னர்களின் சரிதமே இதற்குத் தக்க சான்றுபகரும். "வாழ்மையும் வழக்குங் காத்து மன்னுயிர் புரந்த வள்ளல்" என்று நம் நாடன் கூறியபடி, சத்தியவிரதனாக விருந்து நீதிசெலுத்துபவனே அரசனெனப்படுவான். அவனே சான்றோன். இந்நடுநிலைமையை நாட்டுவதற்கன்றோ அக்காலந்தொட்டு இக்காலம் வரை அரசர்கள் தங்களுக்குத் துணையாகப் பாராளுமன்றென (Parliment) ஸ்தாபித்து ஜனங்களின் தேவைகளை யுணர்ந்து செங்கோலோச்சி வருகின்றனர்.

"சான்றோரில்லாத் தொல்பதி யிருத்தலில் தேன்தேர் குறவர் தேயம் நன்றே" என்ற நறுந்தொகையின் பிரகாரம் நடுநிலைமையுடையோர்களில்லாத விடங்களில் வசிப்பதைவிட

வனப்புறங்களிலே வசிப்பதே உத்தமமாகும். அதிலும் ஒரு நாட்டைப் பரிபாலிக்கும் அரசன் அந்தநிலை தவறுவானாயின் 'கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில் கடும்புலிவாழுங் காடு நன்றே' என்ற முதுமொழியின்படி, அந்நாட்டிலிருப்பதைவிடப் பிராண ஆபத்தாயிருக்கும் வேறு வனாந்தரங்களிலுமிருந்து, பன்னாளும் வேதனையுறாது திடீரென ஆவியை மாய்த்தின்புறலாம்.

பூவுலகின் கண்ணுள்ள சதுர்வித ஜாதியருள் ஒவ்வொன்றும் இந்நிலையைக் கைக்கொண்டு, "பிறர் மனையவரைப் பெற்ற தாயெனவும்—மைந்தன்" என்ற பாரதச் செய்யுள்படி நடந்து வருவோமாயின், சுந்தரமிருந்த நமதிந்தியமாது புத்திரரனைவரும் நற்கதி யடைவரென்பது துணிபு.

பிரசித்த
பெண்மணிகள்.

(1) காலஞ்சென்ற (அலிசோதரர் வீரத்தாயாராகிய) பீ அம்மாள் தேயத் தொண்டில் மனஞ் சலியாது உழைத்து, ஆடவர் மகளிர் இருவர் மனத்திலும் ஒவ்வொருவரும் இந்தியராய்ப் பிறந்ததற்காகப் பெருமை கொள்ளும்படி தேசச்சிறப்பைக் காட்டிப் பக்தியூட்டிப் பேர் பெற்றார்.

(2) சிந்தாமணி ஆசிரியை சென்னை சோதரி வி. பாலம்மாள். தமிழ் மகளாசிரியை. யாழ்ப்பாணம். மங்களாம்பாள் இருவரும் தங்கள் பத்திரிக்கைகளின் மூலமாய் ஆயிரக்கணக்கான பாரதபுத்திரரை தேயத்தொண்டி லீடுபடுத்தி கியாதி பெறுகின்றனர்.

(3) ஜெகப்பிரசித்த ஸ்ரீமதி சரோஜினிதேவி, ஆங்கில அன்னிபெஸன்ட், காந்திபுராணமியற்றிய பண்டிதை அசலாம்பிகை 300-ம் நம்பர் ஒத்த மெல்லிய கதர்நூல் நூற்ற கமலவேணியம்மாள், தென்தேசராணி சாராதேவி, ஆண்டாளம்மாள்; பார்வதி சந்தன தேவி முதலியோர் தங்கள் தேசபக்தியாலும், பிரசங்கங்கள் நூல் ஆராய்ச்சி, சிறை வாசங்களால் புகழ் பெற்று வாழ்கின்றனர்.

(4) நூர்ஜகான் என்னும் கோஷாப் பெண் லக்ஷ்மணபுரி கல்லூரியில் M. A. பட்டம் பெற்றுத் தன்னை விளக்கினள்.

(5) லேடி சதாசிவய்யர், மிஸ்ஸஸ் பான்ட்ரங்கராவ் மிஸஸ் ஸ்டார்ன் மூவரும் சென்னை கௌரவ மாஜிஸ்திரேட்டாகவிளங்குகின்றனர்.

(6) P. சாரதாம்பாள், இராஜலக்ஷ்மி. முத்துலக்ஷ்மி. V. P. ஜானகி. S R. கமலம் இவ்வைவரும் சிறந்த நடிகளாகப் பெயர் வகித்திருக்கின்றனர்.

அயோக்கியப் பினத்தல்.

வன்னிகுலத்தவர்களை அவமதித்ததாக எம்மையும் திருஞானசம்மந்த செட்டியையும் பிரதிவாதியாகச் சேர்த்த ஷை கேசானது திருஞானசம்பந்தச் செட்டி மட்டும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதால் ஷை கேஸ் வாபீஸ் வாங்கிக்கொண்டதை நேயர்கள் நன்கறிவர். ஆனால் சில அயோக்கிய வீண் பிதற்றர்கள் யாமு மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகத் தூற்றித் திரிவது நம்மீதுள்ள துவேஷமே யாம். நிற்க சேலம் க்ஷத்திரியன் பத்திராதிபரும் நானே மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாக பத்திரிகையில் எழுதியதற்கு அவர்மீது வக்கில் நோட்டீஸ் கொடுத்ததால் அன்னவர் என்னிடம் தனது பத்திரிகை மூலமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். நிலைமை இவ்விதமிருக்க, நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாக சொல்வது வீண் அயோக்கியத்தனமெனக் கூறி முடிப்பாம்.

சிவமஹாமந்திரம்.

ஆயிரத்தெட்டு சிவஸ்தலங்களின் பெயரும் ஆயிரத்தெட்டு சிவநாம அஷ்டோத்திரம் அர்ச்சனையும் சிவபஞ்சாட்சர மூலமந்திரமும், வீடுகளிலும், வியாபாரச்சாலைகளிலும் லட்சுமிகரமுண்டாவதற்கு (ஸ்தாபிக்கக்கூடிய) ஸ்தூல பஞ்சாட்சர வசியச்சக்கரமும் தங்கத் தகட்டிலாவது, வெள்ளியிலாவது, பஞ்சலோகத்திலாவது எழுதி குளிசமாடி தேகத்திலணிவதற்கு சூட்சும பஞ்சாட்சர சக்கரம் இவைகள் செய்முறையும் இதற்கு மந்திரம் உரு பூசை இவைகளின் விபரத்துடனும் ஸ்ரீமகாகணபதி மூலமந்திரம் அஷ்டோத்திரம் வசியச் சக்கரம் யிவற்றுடன் உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு தயாராயிருக்கின்றது.

சிவமகாமந்திரப் புத்தகம் விலை அணா 0 6 0
1008-சிவலிங்கப்படம் விலை அணா 0-6-0

இதில்கண்ட சிவமகாமந்திரம் 1008 சிவலிங்கப்படம் வேண்டியவர்கள் தபால் ஸ்டாம்பு வாங்கி எமது விலாசத்துக்கு அனுப்பவும். நீங்கள் அனுப்பிய ஸ்டாம்பு எமக்கு கிடைத்தவுடன் மறுதினம் இரண்டுதினுலகு ரிஜிஸ்டர் பார்சல் மூலியமாக அனுப்பி வைக்கிறேன். அல்லது 0—14—0 எமக்கு மணியார்டர் செய்யவும்.

FREE!! FREE!!!

100--YEARS

CALENDAR

Those who require this calender must send Postage charge 1-anna stamp
Apply to G. O. S. COMPANY
S. P. R. MEDICAL HALL.
POST BOX NO, 1258, MADRAS.

வடக்கன்குள நாடார் ஐக்யசங்க

ஆண்டு நிறைவு விழா.

ஜை. வி. ஜொர்ஜி. பிலேந்திர்நாடார்,

கொளம்பு.

வக்ஸால் வீதி 5 ம் நெம்பர் கட்டடத்தில், மனோகரமான அலங்காரங்களுக்கூடே; இக்கூட்டமானது S. தானியேல் நாடாரவர்கள் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்றது. முக்கிய கனவான்கட்குப் புஷ்ப ஆரங்களிடப்பட்டபின், ஒற்றுமை, கடந்த காலம். சுதந்திர முதலியவற்றைப் பற்றி உபந்நியாசங்கள் நடந்தன. இறுதியில் பின் வருடத்திற்குத் தலைவர், காரியதரிசி, பொக்கிஷதார், பரிசோதகர், ஆலோசனைக் கர்த்தாக்கள் நியமிக்கப்பட்டு, இராஜ வாழ்த்துடன் சபை மங்களகரமாக முடிவுற்றது.

மதிப்புரை.

விஜயா.

ஞாயிறு தோறும் வெளிவரும் வாரத் தமிழ்ப் பத்திரிகை.

இப்பத்திகையில் பிரசுரமாகும் விஷயங்கள்: விவசாயம், கைத்தொழில், வியாபார விஷயங்கள்; ராஜாங்க விஷயங்கள், நீதிகளைப் புகட்டும் பொது விஷயங்கள்; ஆர் ரூர் சரித்திரம் இயற்கை அற்புதங்கள்; சிறுவர்களுக்கான சிறந்த நீதிக்கதைகள்; ஸ்திரீகளுக்கான விஷயங்கள்; உலகவர்த்தமானம்; தேசவர்த்தமானம்; வைத்தியம், சுகாதாரம், சோதிடம்; உயர்தரமான நாவல்கள், நாடகங்கள்; சங்கீதம், சாஸ்திரம்; மதசம்பந்தமான விஷயங்கள் முதலியன.

வருடசந்தா ரூ 3-8-0 (தபாற்கூலியுள்பட)

மானேஜர், விஜயா கார்யாலயம்,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சிறுப்பள்ளி.